REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஆவணி கசு 2-9-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 9

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# கல்வி நிலைமை

## அரசினருக்கு திரு. தம்பர் யோசனை

இலங்கையின் இன்றைய கல்வி நிலைமையைப்பற்றியும், எதிர்காலத்திற் கல்வி முறை எப்படி அமைய வேண்டுமென்பதுபற்றியும் இத்துறையில் அரசினர் செய்யவேண்டிய முக்கிய பணிகளைப்பற்றியும் அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத் தலைவர் திரு. ஏ. ஈ. தம்பர் அவர்கள் ஆசிரியர்களின் வருடாந்த மகா நாட்டில் நிகழ்த்திய தமது தலைமைப் பேருரையில் விளக்கமாகக் கூறியிருக்கின்றார்கள்:

அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் வருடாந்த மகாநாடு இம்முறை குருநாகலில் சென்ற வெள்ளிக்கிழமை (23-8-51) நடைபெற்றது.

பொதுவாக ஆசிரியர்களின் சம்பளத்திட்டமும் அவர்களின் வாழ்க்கைவசதிகளும் திருப்திகரமற்றதென்ற அபிப்பிராயம் என்றுமே இலங்கையில் நிலவிவருகின்றது. இதுசம்பந்தமாகத் திரு. தம்பர் அவர்கள் பேசும்போது அரசினருக்கு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் கூறுவதாவது: இன்று சேவையில் இருந்துவரும் ஆசிரியர்கள் மனரம்மியத்துடன் உழைக்கவேண்டுமென்பதை அரசாங்கம் விரும்புவதாயின் ஆசிரியர்களைத் திருப்தி செய்வதற்கான வழிகளை உடனடியாகக் கையாளவேண்டும். அத்துடன் கவர்ச்சிகரமான ஒரு சம்பளத்திட்டத்தை வகுத்தாலன்றி இளைஞர்கள் ஆசிரியத்தொழிலை விரும்பப்போவதில்லை. இவ்விஷயத்தில் அரசாங்கம் ஆகவேண்டிய காரியங்களைச் செய்தாற்றான் எந்தவிதமான நல்ல கல்வித்திட்டத்தையும் வெற்றிகரமாக நடாத்த முடியும். ஆசிரியர்களும் போர் வீரர்கள் தாம். ஆம், அவர்கள் அறியாமையை எதிர்த்துப் போர் புரிந்துவருகின்றனர். இப்பெரும் போரில் அவர்கள் வெற்றி பெறவேண்டுமாயின் அவர்கள் மனரம்மியமாக வாழ வகை காணவேண்டும். ஆசிரியர்கள் விசுவாசமாக உழைப்பதுடன் 'அவர்களின் 'படை'ப்பலமும் அதிகமாக இருத்தல் அவசியமாகின்றது. ஒரு நாடு சிறப்புற வேண்டுமாயின் அங்குள்ள ஆசிரியர்களின் தொகை பெருக வேண்டும். புத்தியுள்ள ஓர் அரசாங்கம் இப்பணியைச் செவ்வையாக முடித்த பின்னரே தேசத்தைச் சீர்பெறச் செய்யும் வேலையில் ஈடுபட வேண்டும்.

### தாய்மொழி

தாய்மொழி மூலமே கல்வி பயிற்றப்படவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருப்பதைக் குறித்துத் திரு. தம்பர் அவர்கள் தெரிவிப்பதாவது:

இலங்கை இப்போது சுதந்திரம்பெற்றிருப்பதால் தாய்மொழியைப் போதனா மொழியாக அமைத்துக்கொண்டது. இன்று சகல பள்ளிக்கூடங்களிலும் ஆரம்ப வகுப்புகளிலே தாய்மொழி மூலமாகவே கல்விபயிற்றப்பட்டு வருகின்றது. ஆனால் இப்பிள்ளைகள் ஆறாம் வகுப்பை அடைந்ததும சகல பாடங்களையும் ஆங்கிலத்திற் பயிலவேண்டிய கஷ்டமான நிலைமை ஏற்படுகின்றது. போதனா முறையில இப்படியான திடீர்மாற்றம் ஏற்படுவதால் உண்டாகும் கஷ்டம் நீக்கக் கூடியதொன்றேயாகும். பாடப்புத்தகங்கள் இல்லையே என்ற குறையையும் இலகுவாக நீக்கிவிடலாம். இலங்கையில் எஸ். எஸ். ஸி. பரீட்சைகள் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெற்று வரும்போது, சிறந்த பாடபுத்தகங்கள் குறைவெனக் கூறுவதில் ஓரளவு உண்மை இருக்கின்றது.

### பல்கலைக் கழகம்

இரண்டாவது பல்கலைக் கழகம் ஒன்று அவசியமென்பதை வற்புறுத்தித் திரு. தம்பர் அவர்கள் தமது விரிவுரையிற் குறிப்பிட்டிருப்பதாவது:

கொழும்பிலுள்ள பல்கலைக் கழகம் போராதனைக்கு நிரந்தரமாக மாற்றப்படுகின்றது. இங்கிலேயில் இரண்டாவது பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுவது ஏற்றதென நான் கருதுகின்றேன். வர்த்தகத் துறையிலும் ஏனைய தொழிற்றுறைகளிலும் பட்டதாரிகள் பலர் வேண்டப்படுகின்றனர். இவர்களை இப்பல்கலைக் கழகத்தில் உற்பத்திசெய்து உதவக்கூடியதாக இருக்கும். சாம்ராச்சிய நாடுகளுள் ஸ்ரீலங்கா மிக இளமையானது. தொழில் நுட்பம் தெரிந்த விஞ்ஞானிகளும் இலங்கைக்கு அதிக தொகையில் தேவைப்படுகின்றனர். இப்போதுள்ள பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறுபவர்கள் மட்டும் எதிர்கால இலங்கையின் தேவைகளை எவ்வாறு பூர்த்திசெய்ய முடியும்? எனவே, இரண்டாவது பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவவேண்டியது அவசியமாகின்றது. பல்கலைக் கழகத்துக்கு வெளியேயுள்ள ஒருவரைத் தலைவராகக் கொண்ட விசாரணைச்சபை ஒன்றினை ஏற்படுத்துவது அவசியமாகும். இச்சபையினர் தொழிற்றுறைக்கு உகந்த பட்டதாரிகளைத் தெரிந்தெடுத்து உதவலாம்.

# பனைக்கு ஆபத்து

## அதனைப்பாதுகாக்கவேண்டும்

யாழ்ப்பாணம், 31-8-51

பூலோக கற்பகவிருட்சமெனப் போற்றப்பட்டுவரும் பனைக்கு இப்போது ஆபத்து ஏற்படவிருப்பதாக யாழ்ப்பாணம் எங்கும் ஒரே பேச்சாக இருக்கின்றது. ஏற்கனவே, பெருந்தொகையான பனை மரங்களை வீழ்த்திய காரணத்தால் வடபகுதிக்குப் பலதுறைகளிலும் பெருநட்டம் ஏற்படலாயிற்று. இக் கஷ்டங்கள் நாட்டினை இன்னும் விட்டபாடில்லை. மலைநாடுகளில் மழை வீழ்ச்சிக்கு மலைகள் பேருதவியாக இருந்துவருவதுபோல் சம பூமியாகிய யாழ்ப்பாணத்துக்குப பனைமரங்கள் குன்றென நிமிர்ந்து நின்றுமழை பெய்வதற்கு உறுதுணை புரிந்து வருகின்றன. அதிக தூரத்தில் உள்ள பனைமரக் கூடலைப் பார்க்கும்போது அது மலைபோலவே காட்சி தருவதைக் கவனிக்கலாம்.

அராபியர்களுக்குப் பேரீஞ்சு மரம் பிரயோசனமாக இருப்பதுபோன்று வரண்ட பிரதேசமாகிய வடபகுதியிலுள்ள மக்களுக்கும் பனைமரங்கள் மிக்க நன்மைகளைக் கொடுத்துவருகின்றன. இப்போது சில வருடங்களாக யாழ்ப்பாணம் மழையில்லாத மாரியை அனுபவித்து வருகின்றது. பனை மரங்களை நினைத்தவாறு வெட்டி விழ்த்திப் பலரும் பணம் சம்பாதித்து வருவதும் இதற்கு ஒரு காரணமாகும். காலஞ்சென்ற இயந்திரத் துறைப்பகுதிக் கலைஞர் திரு. மகாதேவா அவர்கள் பனைமரங்களை யாழ்ப்பாணத்தவர்கள் கண்ணெனப் போற்றி வரவேண்டுமெனப் பல சந்தர்ப்பங்களில் வற்புறுத்தியிருந்தார். இதற்கு ஒருவரும் செவி சாய்ப்பதாயில்லை.

இப்போது கிடைத்துள்ள செய்தியின்படி 25,000 பனை மரங்கள் கல்லோயாவில் வீடுகள் கட்டுவதற்குத் தேவைப்படுகின்றன வெனவும், அத்தனை மரங்களையும் பெறுவதற்குமுயற்சிகள் நடைபெறுகின்றனவென்றும் அறியக்கிடக்கின்றது. பணம் சம்பாதிக்க விரும்புபவர்கள் இத் தருணத்தைக் கைவிடாது காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள விரும்புவார்கள். நாட்டுமக்கள் கஷ்டமுற்றாலும் தங்களிடமுள்ள பனை மரங்களைக் காசாக்கிக்கொள்ள விரும்பக்கூடாதென்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகின்றது.

'காடு வளர்ப்போம்' என்று அமரகவி பாரதியார் கூட இந்த ஆபத்தை அறிந்துதான் பாடிச் சென்றாரோ? என்னவோ! இந்தியாவிற் கடந்த இருவருடங்களாக 'வன மகோற்சவம்' நடைபெற்றுவருகின்றது. மரங்களை வளர்ப்பது அங்கெல்லாம் இப்போது ஒரு பக்திமிக்க பெரும் பணியாகக் கருதப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்து மக்களும், பனைமிகுதியாகவுள்ள இடங்களிலுள்ள ஏனையோரும், உயிர்க்குயிரான பனைமரத்தைப் பேணி வளர்த்து நாட்டின் செழுமைக்கு உதவுவார்களாக.

பனை வளர்ப்போம்; அதைப் பாதுகாப்போம் என்பது எமது மணி மந்திரமாக இருக்கவேண்டும்.

# பெரிய ஆபத்து

## பகிரங்கக் கூட்டம

'ஆயிரக்கணக்கான பனைமரங்களைக் கல்லோயாத் திட்டத்தின்பொருட்டுத் தறிக்கப்போகிறார்களாம். இதனை உடனே தடுத்தல்வேண்டும்.' இது சம்பந்தமாக அகில இலங்கைக் காந்திய சேவாசங்கத்தின் ஆதரவில் 2-9-51 ஞாயிறு பி. ப. 5மணிக்கு ஒரு பகிரங்கக்கூட்டம் யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெறும். வழக்கறிஞர் திரு. இ. சிவகுருநாதன் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

# புதிய நிர்வாக ஒழுங்கு

## கல்வி முன்னேற்றமடைய அறிகுறிகள்

நமது கல்வி நிருபர்

கல்வி முறையிற் பலவித மாற்றங்களும், திருத்தங்களும் ஏற்படும் இச்சந்தர்ப்பத்தில் அரசினர் கல்வி நிர்வாகத்திலும் புதிய நிர்வாக ஒழுங்குகளை அனுட்டானத்துக்குக் கொண்டுவர முடிவு செய்துள்ளனர். இந்தப் புதிய மாற்றப்படி கல்விநிர்வாகம் இனி மாகாணக்கல்வி அதிகாரியின் பொறுப்பிலேயே விடப்படும். இதுவரையும் கொழும்பிலுள்ள வித்தியாகந்தோரிலிருந்து வித்தியா கர்த்தரால் நிர்வகிக்கப்பட்ட விஷயங்கள் பல இனி மாகாண அதிகாரிகளின் பொறுப்பில் விடப்படும். இப்புதிய திட்டம் முதன்முதலாக மேல்மாகாணத்திலும் மத்திய மாகாணத்திலும் பரீட்சிக்கப்படும். அதன் பின்னரே மற்றைய மாகாணங்களில இது அனுசாரணக்கு வரும். இப்புதிய ஒழுங்கினாற் கலவிமுன்னேற்றம் தங்குதடையின்றி மிக விரைந்து முன்னேறிச்செல்லுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்வி சம்பந்தமாகவுள்ள விஷயங்கள் யாவும் இதுவரையும் கொழும்பிலிருந்தே முடிவு செய்யப்பட்டுவந்தன. இக்காரணத்தால் எத்தனையோ அவசிய விஷயங்கள் விரைந்து காலத்தில் முடிவு செய்யப்படாது மாதக்கணக்காக, வருடக்கணக்காக, இழுபட்டு வந்தன. இக் காரணத்தாற் கல்வி முன்னேற்றம் அவசியமின்றித் தடைப்படலாயிற்று. இனி அவ்வாறு தாமதங்கள் ஏற்படக் காரணமில்லை. மாகாணங்களிற் கல்வி நிர்வாகத்தை நடாத்தும் அதிகாரிகள் உடனுக்குடனேயே தமக்குப் புதிதாகக் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு எவ்விஷயங்களையும் முடிவு செய்யும் உரிமையும் அதிகாரமுமுடையர். நேரே சென்று வித்தியாசாலைகளைத் தரிசித்துக் குறைநிறைகளை நோக்கிச் செய்ய வேண்டியதைச் சுணக்கமின்றி முடிக்கும் வசதி மாகாண வித்தியாதிகாரிக்கு விடப்பட்டது நல்ல முறையென்றே கூறவேண்டும். இப்புதிய முறை அனுசரணைக்கு வரின் இதுவரையும் வித்தியாபகுதியினர் மேற் கூறப்பட்ட பல குறைகள் குற்றங்கள் முற்றாக நீங்குவதற்கு இடமுண்டு.

இப் புதிய முறைப்படி மாகாணங்களிலுள்ள வித்தியாகந்தோர்கள் விசாலிக்கப்படவேண்டியதாகும். செய்யப்பட்டுவந்த வேலைகள் அதிகரிக்கவே அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொகையும் பன்மடங்கு அதிகரிக்குமென்றே கூறவேண்டும். மாகாண வித்தியா அதிகாரியின் கடமையும் பொறுப்பும் பன்மடங்கு கூடிச்செல்கின்றது. கல்வி விஷயமாக நாட்டிற் காலத்துக்குக் காலம் எழும் தகராறுகள் பிணக்குகள் என்பனவற்றை விரைந்து முடிவுசெய்யவும், கல்வி விருத்திக்குரிய முறைகளை விரைந்து கையாளவும் இப்புதிய திட்டம் இடங்கொடுக்கின்றது. கல்வி விருத்தியில் நெருங்கிய சம்பந்தமுடைய ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், வித்தியாசாலை முகாமைக்காரர், வித்தியாபகுதி உத்தியோகத்தர் ஆகிய யாவரும் ஒருங்கு சந்தித்து ஒற்றுமையான முறையிற் கல்விக்குரிய விஷயங்களைக் காலதாமதமின்றி முடிவுசெய்ய ஏற்ற வசதி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# பனை வளர்ப்போம்; அதைப் பாதுகாப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

கொண்டோடி

- அமெரிக்கப் பத்திரிகை நிருபரான தொமஸ் என்பவர் கொழும்பு வந்தடைந்தாராம்.
- இவர் கோஸோங் நகரில் நடைபெற்ற சமாதான மகாநாட்டு வைபவங்களை அமெரிக்கப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்து வந்தாராம்.
- செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் கொம்யூனிஸ்டுகள் பிரெஞ்சு இந்தோசீனத்துக்குள் நுழைந்து கொள்வார்களாம்.
- ஈற்றில் இருபகுதியினரும் தோல்வியடையக் கூடுமாம்.
- கோரியாவிலும் வடகோரியரும் தென்கோரியரும் தோல்வியுற்றனராம்.
- ஆனபடியாற் கொம்யூனிஸ்டுகள் சமாதானம் வேண்டுமென்றனராம்.
- மூன்றாவது உலக யுத்தம் மூளாதென்பது இந்த நிருபரின் சித்தாந்தமாம்.
- இரண்டரை(யாவது) உலக யுத்தம் இப்போது கோரியாவில் மூண்டிருக்கின்றதாம்!
- கோரியாவில் ஏழரை நாட்டான் ஆதிக்கம் செலுத்துகின்றானும்.
- இதனாற்றான் ஐக்கியநாடுகள் சங்கம் அல்லோலப் படுகின்றதாம்.
- கோரியாவைப் பிடித்த ஏழரையான் பிரெஞ்சு இந்தோசீனத்தையும், சீயத்தையும் எட்டிப்பார்ப்பானும்.
- யப்பான் சமாதான மகாநாடு நல்ல முயற்சியாம்.
- இந்தியாவின் யோசனைகளை அமெரிக்கா ஏற்க மறுக்கின்றதாம்.
- அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் கீழைத்தேசத்தில் ஒரு நண்பன் அவசியமாம்.
- யாப்பானில் 99 சத விகிதத்தினர் அமெரிக்காவை ஆதரித்து நிற்கின்றனராம்.
- அணுக்குண்டை அமெரிக்கா பிரயோகித்தபடியாற்றான் இந்த அன்பு பிறந்திருக்கவேண்டுமாம்.
- அணுக்குண்டுக்கும் உண்டோ அடைக்குந்தாழாம்.
- இந்த அமெரிக்க நிருபரின் அரசியற் சாமர்த்தனியமாம்.
- புதிய பொதுத்தேர்தலிற் சேர்ச்சில் வெற்றிபெறுவாராம்.
- பிரிட்டிஷ் தொழிற்கட்சி தேர்தலில் மண்கவ்வுமாம்.
- அமெரிக்க மண்ணிற் பிறப்பவர்களுக்குக் கண்ணின் தெரியாதாம்.

# பழம் பெருங் கோயில்

## மட்டக்களப்புச் சைவக்கிராமம்

கிழக்கு மாகாணத்திலுள்ள காரைதீவானது ஒரு சைவக் கிராமமாகும். முத்தமிழ் மணியாம் விபுலாநந்தனைப் பிறப்பித்த பெருமையும் இக்கிராமத்துக்கே உரியது. சித்த புருடனும் சித்தானைக்குட்டிச் சுவாமி வாழ்ந்ததும், சமாதியிலே அடைந்ததும் இப்பதியேயாகும். கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் பத்தினித்தெய்வ வழிபாட்டை இவ்விலங்கை மாதீவில் ஆரம்பித்துவைத்ததின் பெருகப் பல்லாண்டுகளின் முன் பத்தினித் தெய்வமாம் கண்ணகித் தேவியாருக்கு இங்குமோர் ஆலயம் அமைக்கப்படலாயிற்று. இக்கோயில் பழமையும், பண்புசால் பெருமையும், வாய்ந்தது. சாதிமதவேறுபாடின்றிச் சகலராலும் போற்றப்படுவது. இவ்வம்மன் ஆலயத்தில் பௌர்ணமியை அடுத்து வரும் வைகாசித் திங்கள் தோறும் திருநாள் கொண்டாடப்படும். இக்கொண்டாட்டம் எட்டு நாட்கள்வரை தொடர்ந்து நடைபெறும். கிராமமே பக்திப்பரசவத்திற்றிகழும். இந்நாட்களிலே பத்தினித் தெய்வத்தின் வரலாற்றைக் கூறும் கண்ணகை அம்மன் வழக்குரை இனிமையாகப் பாடப்படும். விபுலாநந்த அடிகளாரெனப் பல்லோராலும் புகழ்ந்துரைக்கப்படும் மயில்வாகனனார் சிறுபராயத்திலே தம்மன்னையாரோடு இப்புனித சந்நிதி புகுந்து, அங்கு பாடப்படும் பத்தினித் தெய்வத்தின் வழக்குரை நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனித்து வருவது வழக்கம். பத்தினித் தெய்வத்திலுள்ள பக்தி விசுவாசமும் வழக்குரைப்பாடலிலுள்ள நவரசச் சுவையும் பிற்காலத்திலே சுவாமி அவர்களை சிலப்பதிகார ஆராய்ச்சியில் ஈடுபடுத்தி அதன் பேறாக அகிலம் போற்றும் யாழ் நூல் எழுதுவதற்கு ஏதுவாக இருந்ததும் இவ்வம்மையாரின் கடாட்சமேயாகும். இவ்விதம் பண்டு தொட்டுப் பேரும் புகழும் பெற்ற இப்புனித ஸ்தலத்தில் இன்று அழகிய கோபுரவாயிலொன்று ஆக்கப்பட்டது. திறப்பு விழா சென்ற மாதம் 17-ந் திகதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கோபுரம் மின்சார வர்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்விழாவிற்குச்சாதி, மத பேதமின்றிச் சகலரும் சமூகந்தந்து வழிபாடு செய்தனர். திரு ஏ. தட்சணாமூர்த்தி (உதவி மாகாண அதிபர்) அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்கள். திரு அ. வி. மயில்வாகனம் (உதவி வித்தியா அதிகாரி) தேசிகமணி கா. அருணாசலம் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாக இருந்தனர்.


புதுமைப்பித்தன்

தமிழிலே தந்த

பளிங்குச் சிலை

விலை : ரூபா 1-20 — தபாற் செலவு சதம் 30

தனலக்ஷ்மி புத்தகசாலை, சுன்னாகம்.



சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COMSACK தபாற்பெட்டி இல. 33. டெலிபோன் இல. 5351.

[4383]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வ. ரா. பாரதி யுகத்தின் ஒளியெனத் தமிழ் நாட்டில் விளங்கினார்.

அந்த ஒளி இன்று மறைந்த விடத்தும் அது தமிழ் எழுத்தாளர்களின் உள்ளொளியாக என்றும் பிரகாசிக்கும்

# வ. ரா. உணர்வு

**'நானேன்தான் வ. ரா.'** இவ்வாறு 1944-ம் ஆண்டு கொவெம்பர் மாதம் கோயமுத்தூரில் நடைபெற்ற முதலாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின்போது வ. ரா. அவர்கள் தம்மை எழுத்தாளர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். வ. ரா. என்ற இந்த இரண்டு எழுத்துக்களுக்கும் தமிழ்நாட்டில் இருந்துவரும் செல்வாக்கின் காரணமாகவே இப்படி இரத்தினச்சுருக்கமாக வ. ரா. தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

ஸ்ரீ வ. ரா. அவர்களைத் தமிழ்நாட்டின் முதல் எழுத்தாளர் என்றும், தமிழ் எழுத்தாளரின் முதல்வர் என்றும், தமிழ் எழுத்தாளரின் நிரந்தரத் தலைவர் என்றும் சொல்வது மிகையாகாது என்று ஆசிரியர் கல்கி அவர்கள் எழுதியிருப்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். தினசரி ஆசிரியர் சொக்கலிங்கம், கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி, சிட்டி போன்றவர்கள் வ. ரா. வைப்பற்றி எழுதிய பின்னர் வேறு எவரும் அன்னாரின் எழுத்து வன்மையைப்பற்றியோ தமிழ்நாட்டுக்கு அவர் செய்துள்ள சேவைகளைப்பற்றியோ ஒன்றுமே எழுத வேண்டியதில்லை.

மகாகவி பாரதியார்தான் ஆசிரியர் வ. ரா. அவர்களின் மாதா பிதா குரு தெய்வம். பாரதியாருடைய பெருமையை இந்தியாவும் உலகமும் அறியும்படி செய்வதே வ. ரா. வின் புருஷார்த்தம். தமிழ் மொழியிடம் அன்பு அவருடைய மூச்சுக் காற்று. சீர்திருத்த ஆவேசம் அவருடைய மனம், புத்தி, சித்தம். சுதந்திரப்பற்று அவருடைய உயிர். தன்மதிப்பு அவருடைய ஆத்மா. எழுத்தாளரின் மேன்மை, முக்கியமாக, தமிழ் எழுத்தாளரின் முன்னேற்றம் அவருடைய மதம். வெகுகாலத்துக்கு முன்பே சாதிப்பற்றை ஒழித்தவர் வ. ரா. அவர்கள் எனினும் அவரை 'எழுத்தாளர் சாதி' என்று குறிப்பிட்டால் ஆட்சேபிக்கமாட்டார் என்று நினைக்கிறேன். இது ஆசிரியர் கல்கி அவர்கள் 1948-ம் ஆண்டில் எழுதிய வாசகமாகும்.

* * *

வாசகர்களை மீண்டும் கோவையிலுள்ள 'கோபால்பாக்' என்ற ஜி. டி. நாயுடு அவர்களின் மாளிகைக்கு அழைத்துச் செல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆம், அங்கு நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டுக்குத்தான். தினசரி ஆசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் தலைமை தாங்குகின்றார்கள். அறிஞர் வ. ரா. அவர்கள் 'அஸ்மா' வையும் பொருட்படுத்தாது கம்பளிச் சட்டைக்குள் புகுந்துகொண்டு மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகின்றார்கள்.

"இந்த மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு நான் தகுதியுள்ளவனு என்பதுபற்றி, பாவனை அடக்கத்தோடு நான் ஆராய்ச்சி செய்யப்போவதில்லை. திறந்துவைப்பதே எனது பாக்கியமாக எண்ண என்னால் முடியவில்லை. ஒருவிதத்தில் அதைத் தண்டனையாகக் கருதுகிறேன்.

"எத்தனையோ கசப்பான உண்மைகளைச் சொல்லிச் சொல்லி நான் அபகீர்த்தியும் எச்சும் வாங்கியிருக்கிறேன். இந்த மகாநாட்டிலும் இவற்றைச் சொல்லி இன்னும் அதிகமான கெட்ட பெயர் வாங்கவேண்டி வரலாம். ஆகவே இதைத் தண்டனையாகவே நான் கருத வேண்டியிருக்கிறது."

சீர்திருத்தவாதி ஒருவர் இப்படிப் பேசியிருப்பது நூதனமல்ல. வ. ரா. அவர்கள் எத்தனையோ கசப்பான உண்மைகளை அம்பலப்படுத்தித் தமது பேனாவைத் துணைக்கொண்டு தமிழ் நாட்டினைச் சமூக அரசியற் றுறைகளை வளம்படுத்தி வைத்துள்ளார். தமது மனச் சாட்சிக்குச் சரியெனக் கண்டவற்றைப் பலதத எதிர்ப்புக்களுக்கிடையில் நிலைநாட்டிவந்துள்ளார். ஆகவேதான், தமிழ் எழுத்தாளர்கள் வெறும் வயிற்றுப்பிழைப்புக்காக உழைக்கிறவர்கள் அல்ல என்றும், மனச் சாட்சியை விற்றுப் பதினாயிரக் கணக்கிற் சம்பாதிக்கப் பேராசை பிடித்து அலையும் தேசத்துரோகிகள் அல்ல என்றும் நமது ஆயுதமாகிய பாஷையின் மூலமாக, மக்களுக்குத் தொண்டுசெய்வதே நமது சங்கற்பம் என்றும் பிறர் தெளிவாக உணரும்படியாக நாம் செய்யவேண்டும் என வ. ரா. அவர்கள் எழுத்தாளர்களுக்கு இடித்துரைத்திருப்பதை இச்சமயத்தில் இங்கு ஞாபகப்படுத்துவது மிகவும் பொருத்தமானது.

அறிஞர் வ. ரா. அவர்கள் சென்றமாதம் 23-ந் திகதி காலமானார் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. சமீபத்திற் சென்னையிற் புதுமைப்பித்தன் நினைவு நாள் கொண்டாடப்பட்டபோது அவ்விழாவிற்பங்கு பற்றிப் பேசியவர்களுள் வ. ரா. அவர்களும் ஒருவராவர். சென்ற மாதம 24-ந் திகதி சென்னையிலிருந்து அன்பர் வே. சுப்பிரமணியம் அவர்கள் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதம் 27-ந் திகதி எனக்குக் கிடைத்தது. அதில் செப்டெம்பர் மாதம முற்பகுதியில் வ. ரா. அவர்களைத் தாம் இலங்கைக்கு அழைத்துவரத் திட்டம் போட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அன்பர் எனக்குக் கடிதம் எழுதிய அன்று மாலை அறிஞர் வ. ரா. அமரவாழ்வு எய்துவார் என்பதை அந்த அன்பர் அப்போது அறியவில்லை. இதை நினைக்கும்போது வ. ரா. அவர்கள் இன்னும் சிறிது காலமாவது உயிரோடு இருந்தாரில்லையே என்று எண்ணி உருகவேண்டியிருக்கின்றது.

மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்துப் போராடுவதற்கு வ. ரா. அவர்கள் பத்திரிகைகளைச் சாதனமாகக் கொண்டார். 1916-ம் ஆண்டிலிருந்து எத்தனையோ பல வாரப்பத்திரிகைகளிலும் தினப்பத்திரிகைகளிலும் ஆசிரியராக விருந்து அரும்பணியாற்றிவந்தார். கொழும்பிலிருந்து வெளியாகி வரும் வீரகேசரியின் ஆசிரிய பீடத்தையும் வ. ரா. அவர்கள் அலங்கரித்திருந்தார்.

சுந்தரி என்ற புரட்சிகரமான கதையின் மூலம் தமிழ் நாட்டிற் சீர்திருத்த விதைகளைப் பரப்பியிருந்தார் வ. ரா. அவை முளைகொண்டு பயிராகி நாட்டுக்குச் சகல துறைகளிலும் நற்பணியாற்றியுள்ளன. இலக்கிய உலகில் வ. ரா. மணிக்கொடியைத் தாங்கிய காலத்திலே தமது எழுத்துக்கள் மூலம் தமிழுக்கு ஒரு புதிய சக்தி ஊட்டிவந்ததுமன்றி, அச்சமற்ற புதியஎழுத்தாளர்களையும் தோற்றுவித்தார். தமது பேனாச்சித்திரங்கள் மூலம் தமிழர்களிடையே இரசிகத்தன்மை வளம்பெறச் செய்தார். அவரது நடைச் சித்திரம், மழையும் புயலும் என்ற நூல்கள் இக்கால இலக்கியச் சம்பத்துக்களாக அமைந்து தமிழ் மொழிக்குப் பெருமை தந்தன. 'கோதைத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம். இலங்கை.

## கவிதைப் பெண்

— புதுவை முதுகண்ணன் —

எழுதுகோல் எடுத்தேன் என்முன்
எழிற்கவிப் பெண்ணைக் கூவிப்
பழுதிலா வையம் வாழப்
பண்பமர் கவிதைப் பிள்ளை
வழுவெலாம் போக்க இன்னே
மாண்புடன் படைப்போம் என்றேன்
தொழுதுகை கூப்பி யங்கோர்
சோலையின் பக்கல் நின்றாள். 1

மருவினேன் அந்தப் பெண்ணை
மைதவழ் வானைக் கண்டு
பெருவியப் பெய்தும் வண்ணம்
பீடுடன் விரித்துத் தோகை
விருப்புற ஆடி அன்னாள்
விளக்கொணு இன்பந் தந்தாள்
வரிக்குயில் குரலில் நின்றாள்
வளமிகும் இசையைத் தந்தாள். 2

பைங்கொடி முல்லை தன்னிற்
பரப்பினாள் மணத்தை; பின்னர்ச்
செங்கனி உதிர்த்தாள் உண்ணச்
சிலிர்த்திடுந் தென்றல் வீசி
எங்குமே உடலில் இன்பம்
ஏற்றினாள் கவிதைப் பெண்ணாள்
தங்கிய ஐம்பொ றிக்கும்
சார்ந்தவள் இன்பந் தந்தாள். 3

ஐரோப்பா யாத்திரை

## பிறஸ்செல்ஸ் நகர்

சென்றவாரத் தொடர்ச்சி

**பிரான்சிலிருந்துபுறப்பட்டு** 9-12-50 காலை பெல்சியத்தின் தலைநகராகிய பிறஸ்செல்ஸ் சேர்ந்தேன். பெல்சியம் பளிங்குக் கண்ணுடி உற்பத்திக்குத் தலைசிறந்தது. இங்குள்ள சனத்தொகை ஏறக்குறைய 85 லட்சம். இதில் பத்தில் ஒரு பகுதியினர் பிறஸ்செல்ஸ் நகரத்தில்வசிக்கின்றார்கள். பெல்சியத்தில் வடபகுதியில் உள்ளவர்கள் பிளெமிஷ் பாஷையும் தென்பகுதியில் உள்ளவர்கள் பிரெஞ்சுப் பாஷையும் பேசுகின்றார்கள். பெல்சியத்தில் நான்கு அரசியற் கட்சிகள் இப்போது இருக்கின்றன. சனத்தொகையில் நூற்றிற்கு 45 சத வீதமானவர்கள் கத்தோலிக்க கட்சியிலும், 38சத வீதமானவர்கள் சோஷலிஸ்ற் கட்சியிலும், 12 சத வீதமானவர்கள் லிபறல் கட்சியிலும், 5 சத வீதமானவர்கள் கம்மியூனிஸ்ற் கட்சியிலும் சேர்ந்திருக்கின்றார்கள். கத்தோலிக்க கட்சியினர் லிபறல் கட்சியினரின் உதவியுடன் இன்று அரசாங்கத்தை நடத்துகின்றனர். பாராளுமன்றத்தின் அங்கத்தினர் தொகை 212.

தென் இந்தியாவில் இராமேஸ்வரம் எவ்விதம் யாத்திரிகர்களின் தொகையால் பணமுட்டின்றி இருக்கின்றதோ அதேபோலப் பிறஸ்செல்ஸ் உம் பிறநாடுகளிலும் இருந்து வரும் உல்லாச யாத்திரிகளின் தொகையாலும் வருவாயாலும் செழித்து இருக்கின்றது. பல அமெரிக்கர் அங்கே சென்று அதிக பணம் செலவு செய்கின்றார்கள். யாத்திரிகர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யப் பிறஸ்செல்ஸ் நகரில் உள்ளவர்கள் பல பிரயத்தனங்கள் செய்கின்றார்கள். புகைபிரத ஸ்தானத்திலும் மற்றும் பொது இடங்களிலும் "அதைப் பாருங்கள், இதைக் கண்டு இன்புறுங்கள்" என்று பல விளம்பரங்கள் தொங்கவிட்டிருக்கின்றார்கள். நான் தங்கியிருந்த விடுதி வீட்டில் ஒருவர் வந்து பார்க்கத்தக்க சில இடங்களுக்கு என்னை அழைத்துச் சென்றார்.

முதலாவதாகப் பட்டினத்தைச் சுற்றிப் பார்த்தோம்.

வழக்கறிஞர்
அ. அருளம்பலம்

என்னுடன் பத்துப் பன்னிரண்டு அமெரிக்கர்களும நாலைந்து பிரான்சுக்காரர்களும் சேர்ந்தார்கள். எல்லாரும் ஒரு பெரிய பஸ் வண்டியில ஏறினோம். எமக்கு இடங்களைக் காண்பிப்பவர் விஷயங்களை முதலில் ஆங்கிலத்திலும் பின்பிரெஞ்சுப் பாஷையிலும் மொழி பெயர்ப்பார். இதே தொழிலை அவர் பல வருஷங்களாகச் செய்துவந்தமையால் பாஷை மிக அலங்காரமாக இருந்தது. புராணப் படிப்பிறகுப் பயன் சொல்வதுபோல இருந்தது என்றுகூட ஒருவாறு ஒப்பிடலாம். கி. பி. 1619-ம் ஆண்டுவரையில பிறஸ்செல்ஸ் நகரில் ஒரு பெரிய பிரபு வாழ்ந்தாராம். அவரின் அருமையான இரண்டு வயதுள்ள ஆண் குழந்தை ஒருநாள் எவ்விதமோ காணமற் போய்விட்டதாம். பலநாட்கள் தேடியபின் குழந்தை ஒருநாள் ஒரு தெருச்சந்தியில் சலம்விட்டுக்கொண்டிருக்கக் கண்டார்களாம். பிரபுவிற்கு ஒரே ஆனந்தம். உடனே அதே இடத்தில் குழந்தை நின்றமாதிரியே ஒரு அழகிய சிலை நாட்டுவித்தார் என்று கூறுகிறார்கள். இன்றும் அதே இடத்தில் குழந்தையின் சிலை ஒன்று சலம் விட்டுக்கொண்டு இருப்பதைக் காணலாம். இதற்குப் பெயர் 'மெனிக்கன் பிஸ்'. பெல்சியத்திலுள்ள கடைகளிலெல்லாம் 'மெனிக்கன் பிஸ்' இன் உருவங்கள் ஏராளமாக வைத்து விற்கப்படுகின்றன.

இதற்குப்பின் 'இராச அரண்மனை' என்று அழைக்கப்படும் கட்டிடத்திற்குச் சென்றோம். ஆனல் பெல்சியத்தின் மன்னர் இங்கு வசிப்பதில்லை. முன்னும் இங்கு ஒரு அரசன் தானும் வசித்ததாகக் கூறப்படவில்லை. ஏதோ ஒரு இராணியின் வெறுப்பினால இக்கட்டிடம் ஒருகாலமும் அரண்மனையாக உபயோகிக்கப்படவில்லை என்றுகூறுகின்றார்கள். பெண்ணின் பெருமை இதிலிருந்து தெரிகின்றது. இங்கிருந்து பெல்சியத்தின் பாராளுமன்றம், ஆங்கிலப் புலவர் பைறன பிரபு வசித்த இல்லம், சந்தை முதலியன பார்த்தோம். சந்தையின் அருகாமையில் கிளிகள், பட்சிகள் விற்கும் இடத்திற்குச் சென்றோம. பரிதாபம! எத்தனையோ அழகான

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

**Pronounce Well**
A NEW BOOK ON PRONUNCIATION
— AVAILABLE AT —
ALL BOOK DEPOTS
PRICE: -/40
THANALUCKUMY BOOK DEPOT :: CHUNNAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம், கரஹு ஆவணி கஎ
— கார்த்தி ஆண்டு 82 —
பேசும் தந்தி இல. 805

## பூலோக கற்பகதரு

வானம் பார்க்கும் பூமியாகிய வரண்ட யாழ்ப்பாணத்தில் மக்கட்குச் ஜீவாதாரமாக விளங்குவது பனை ஒன்றேயாகும். நவ நாகரிகங்கள் புதிய மாற்றங்கள் ஏற்பட்ட இந்தக் காலத்திலும் மக்களுக்கு எத்தனையோவகையிற் பிரயோசனம் அளித்து நிற்பது பனையன்றே. இத்தகைய ஒரு மரத்துக்கு ஆபத்து வருமாயின் அதனை வடபகுதி மக்கள் எப்படிச் சகிப்பரோ? கல்லோயாவில் வீடுகள் கட்டுவதற்கு 25000 மரங்கள் வேண்டுமென்று அரசினர் விளம்பரஞ் செய்துள்ளார்கள். இதைக் கண்டு யாழ்ப்பாண மக்கள் ஏக்கமுற்றுப் பிரமிக்கலாயினர்.

மக்கட்குச் ஜீவாமிர்தம் போன்று விளங்கும் இம்மரத்தைப் பாதுகாப்பது அரசினரின் பெருங்கடமையாக, அவ்வரசினரே இப்போது இந்நாசகாரியத்துக்கு உதவியாக நிற்பது பெரிய விந்தையாகின்றது. உணவுக் கஷ்டம் நீங்காதிருக்கும் இக்காலத்திற் பலவித உணவுப் பண்டங்களை அளித்துவரும் பனைகட்கு ஆபத்து வந்ததைக் கண்டு யார்தான் கவலை அடையார்? இவ்வளவு தொகையாகப் பனை மரங்கள் தறிக்கப்படின், யாழ்ப்பாண மக்களின் நிலை யாதாகும்? அவர்களின் பொருளாதார நிலை என்ன பரிதாப கதியை அடையுமோ? காலத்துக்குக் காலம் பனை மரங்கள் பெருந் தொகையாகத் தறிக்கப்பெற்றமையாலன்றே உணவுக் கஷ்டம் மிக்க நெருக்கடியான நிலையை அடைந்துளது.

அத்துடன் யாழ்ப்பாணத்திற் பெரிய உயர்ந்தமரங்கள் அளவு கடந்து தறிக்கப்பட்டமையாற்றான் மழை போதியளவு பெய்யாமல் அருகிக்கொண்டு வருகின்றது. எனவே இந்த ஆபத்தினின்று யாழ்ப்பாண மக்களைப் பாதுகாப்பது அரசினர் கடனாகும். யுத்தம் நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்திற் பனைகள் உத்தரவின்றித் தறிக்கப்படாதெனச் சட்டம் ஏற்படுத்தினர். உணவுப்பொருள்களை அதிகமாக வழங்கும் இம்மரத்தைத் தொகையாகத் தறித்துப் பெரு நட்டஞ் செய்ய இடங் கொடுப்பதா?

யாழ்ப்பாண மக்கள் இவ்விஷயத்தில் மிக விழிப்பாகவிருப்பது அவசியம். அதிக வருவாயை இலக்காகக் கொண்டு பனை மரங்களைத் தறிக்க இடங்கொடுப்பின் அதனால் வரும் தீமைகட்கு எல்லையுண்டா? எத்தனை குடிசைக் கைத்தொழில்கள் இப் பனையின் பொருள்களிலிருந்து செய்யப்படுகின்றன. சீனி, சர்க்கரை என்பன விலை உயர்ந்த இக்காலத்தில் பனங்கட்டி எவ்வளவு உதவியாகின்றது.

எனவே, இந்தச் ஜீவாமிர்தமாகும் பூலோக கற்பகதருவுக்கு ஆபத்து வராமற் காப்பது யாவராதும் கடமையாகும். யாழ்ப்பாணப் பிரதிநிதிகளாகப் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம் வகிப்போர் இவ் விஷயத்திற் சிரத்தை காட்டுவார்களாக. கைத்தொழில் மந்திரியாராகக் கடமை யாற்றும் கௌரவ ஜி. ஜி. பொன்னம்பலமவர்கள் இவ் விஷயத்தில் ஊக்கம் மேற்கொண்டு ஏற்ற சட்டங்களை இயற்றியாவது வரவிருக்கும் ஆபத்து நிகழாது தடுப்பாராக. பிரதானமாக யாழ்ப்பாண மக்கள் இவ்விஷயமாக மிக்க கிளர்ச்சிசெய்து வேண்டிய பாதுகாப்புக்களைத் தேடிக்கொள்வது அவசியமாகின்றது

## யாழ்ப்பாணப் புகையிலை

யாழ்ப்பாணக் கமக்காரருக்கு மிகுந்தவருவாயையும் இலாபத்தையும் கொடுத்துவந்தது புகையிலையே. இன்று நேற்றல்லச் சென்ற ஐம்பது அறுபதுவருடங்களாகப் புகையிலைச்செய்கை, யாழ்ப்பாணத்தில் மிக்க ஆர்வத்துடன் கையாளப்பட்டுவந்தது. இப் புகையிலைக்கு மலையாளத்தில் நல்ல விற்பனைஉண்டு. வருடவீதம் 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான யாழ்ப்பாணப் புகையிலை அங்கு ஏற்றுமதியாகிவந்தது. இப்போது இந்தியவரசினர், இப்புகையிலை அங்கு இறக்குமதி செய்வதைத் தடுக்க ஏற்பாடுசெய்துவருகின்றனர். ஏற்றுமதித்தொகையை வருடாவீதம் குறைத்துப்பத்து வருடத்துள் இப் புகையிலை அங்கு செல்வதை முற்றாக நிற்பாட்ட வேண்டுமென்பதே அவர்கள் கோட்பாடு. இவ்வித ஒழுங்குகள் மாத்திரம் செய்வதுடன் நில்லாது இப்புகையிலையில் விதித்துவந்த வரியையும் பன்மடங்கு கூட்டிவிட்டனர். இக் காரணங்களால் யாழ்ப்பாணப் புகையிலைக்கு இதுவரையும் இருந்துவந்த விருப்பமும் மாணமும் குறையலாயின. வரியைக் குறைக்கும்படி இந்திய அரசினரை இலங்கை அரசினர் கேட்டபோதெல்லாம், இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் இறக்குமதியாகும் பல பொருள்களில் இலங்கை அரசினர் விதிக்கும் வரியையும் குறைக்கும்படி கேட்கின்றனர். இக் கஷ்டம் விரைவில் நீங்குமென நம்புவதற்கில்லை இதை நோக்கியே இப் புகையிலை விஷயமாக விசாரணை செய்து அறிக்கை வெளியிடும்படி இலங்கை அரசினர் ஒரு விசாரணைச் சபையை ஏற்படுத்தியுள்ளார். இது மிகவும் பொருத்தமானதும் போற்றற்குரியதுமான காரியமாகும். யாழ்ப்பாணக் கமக்காரர் புகையிலைச் செய்கையில் ஏற்ற திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்படுத்த முன்வரினன்றித் தோற்றி எதிர்த்துவரும் கஷ்டங்கள் நெருக்கடிகள் சாமானியமாக நீங்குமென்பது சந்தேகம். மலையாள மக்கட்கு ஏற்ற புகையிலையைப் பயிரிடும் சாமர்த்தியம் வாய்ந்த யாழ்ப்பாணக் கமக்காரர், 'பீடி', 'சிகரட்' என்பன தயாரிப்பதற்கு ஏற்ற புகையிலையைச் செய்கைபண்ண வியலாதா? எப்போதும் மலையாளத்தை நம்பி வாழ்ந்து வருவதா? பல முறையாக இந்த ஆபத்துக்கு யாழ்ப்பாண மக்கள் ஆளாகவேண்டியிருக்கின்றது. எனவே, இவ்விஷயத்தை இவ் விசாரணைச் சபையினர் நன்கு அலசி ஆராய்ந்து அறிக்கை வெளியிடுவாராக. யாழ்ப்பாணக் கமக்காரரும் புதியமுறை [illegible] முன் வர வேண்டும்.

## பாதை ஓரத்தில் பாட்டுக்காரி

கொழும்பு என்ற பட்டினம் இலங்கையில் இருக்கின்றதா, அல்லது இலங்கை கொழும்பு(வு)க்குத் தலைப்பட்டினமா, என்ற தடுமாற்றம் இப்போதுந்தான் இந்தியாவில் இருந்துவருகின்றது.

கொழும்பு என்றொரு நகரம் இருக்கின்ற தென்பதை ஐரோப்பாவில் உள்ள மக்களில் அநேகர் அறியமாட்டார்கள்.

இத்தகைய கொழும்பு மாநகரிற் சாம்ராச்சிய மகாநாடு நடந்ததிலிருந்து அதற்கு நல்ல விளம்பரங் கிடைத்திருக்கின்றது. கொழும்புத் திட்டம் என்பதும் இந்த மகாநாட்டிலேதான் கருக்கொண்டது. இப்போது உலகத்திலுள்ள பத்திரிகைகளில் எல்லாம் கொழும்பு நன்றாக அடிபடுவதை நாம் அறிவோம். இத்தனைக்கும் கொழும்புத் திட்டமே காரணமாகும்.

### கொழும்புச் சோடா

கொழும்புக் கொள்கைகள் மக்களுக்கு நன்றாகப் பிடித்திருக்கின்றன வென்பதற்குக் கொழும்புச் சோடா ஓர் அருமையான உதாரணமாகும். "ஒரேஞ் பார்ளி' என்ற கொழும்புச்சோடாப் பானம் இன்று யாழ்ப்பாணத்து மூலை முடுக்குகளிலுள்ள சின்னஞ்சிறு கடைகளில் எல்லாம் கௌரவ ஸ்தானம் பெற்றிருக்கின்றது. இது காரணமாக நம் நாட்டுச் சோடாவைத் திரும்பிப் பார்ப்பாரில்லை. அதேபோற் கொழும்பிலிருந்து வருபவர்களின் பேச்சுக்கும் நாட்டில் நல்ல மதிப்பு இருக்கத்தான் செய்கின்றது.

### கொழும்புத் திட்டம்

இந்தக் கொழும்புத் திட்டம் தென் கிழக்கு ஆசிய நாடுகளின் செல்வச் சிரமைப்புக்குப் பேருதவிபுரிந்து அந்நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் போகின்றதென அமெரிக்காவும் பிரிட்டனும் பிரசாரம் செய்துவருகின்றன. இத்திட்டத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு கொழும்பிலே மாபெரும் பொருட்காட்சி யொன்று நடைபெறவிருக்கின்றது. இங்கிலாந்து மன்னர் இதனைத் திறந்துவைப்பார். கொழும்புத் திட்டத்தால் இலங்கை பயனடையுமோ என்பது இருந்து பார்க்க வேண்டும். ஆனால் அமெரிக்காவுக்கு இதனாற் கைமேற் பலன் கிடைத்திருக்கின்ற தென்பது மட்டும் உண்மை.

### கொழும்புச் சுருட்டு

கொழும்புச் சோடா, கொழும்புக் கொள்கை, கொழும்புத் திட்டம் என்பன மக்களை ஆட்டிவைப்பதாற் கொழும்புச் சுருட்டு என்ற பெயரைச் சூட்டிச் சுருட்டு வியாபாரம் செய்து பார்க்கும்படி சிலருக்கு யோசனை கூறுகின்றேன். யாழ்ப்பாணம் திறம் சுருட்டுக்கு இப்போது மானங் குறைந்து வருவதால் ஒரு வேளை கொழும்புச் சுருட்டு யாழ்ப்பாணத்தவர்களை மயக்கக் கூடும். இவ்வளவையும் எழுதுவதற்குக் கொழும்புச் சோடா என்ற 'ஒரேஞ் பார்ளி'யின் சுவையே காரணமாகும்.

## திருமணம்

அழகர் — அரங்கநாயகி

சென்னை, திரு. ஈ. ஆர். கோவிந்தன் (ஆசிரியர், Free India) அவர்களின் புத்திரி செல்வி அரங்கநாயகி அவர்களுக்கும் செல்வன் ஆர். அழகர் (விரிவுரையாளர், மதுரைக் கல்லூரி) அவர்களுக்கும் சென்ற ஞாயிற்றுக்கிழமை (26.8.51) மதுரைக்கு அணித்தாகவுள்ள திருப்பரங்குன்றத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. அன்பர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், எழுத்தாளர்களும், பிரமுகர்களும் மணமக்களுக்குப் பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வழங்கியிருந்தனர். புது மணத் தம்பதிகள் சகல சம்பத்துக்களையும் பெற்று நீடுவாழ்வார்களாக!

## கூட்டுறவுத் தினம்

அகில இலங்கைக் கூட்டுறவுத் தினத்தை செப்டம்பர் 9-ந் திகதி மிக விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை இலங்கைக் கூட்டுறவுப் பகுதியினர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

## புதிய நிர்வாக ஒழுங்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைப் பெறுகின்றனர். ஆசிரியர்களாவது, பொதுசனங்களாவது இனிக் கல்வியைப் பொறுத்த எல்லா விஷயங்கட்கும் கொழும்புநகரை நோக்க வேண்டியதில்லை.

கொழும்புநகரிலும், கண்டி நகரிலுமே இப்புதிய ஒழுங்குப்படி நிர்வாகம் நடாத்தக் காரியாலயங்கள் திருத்தி அமைக்கப்படுகின்றன. வித்தியாபகுதியினர் இந்தப் புதிய ஒழுங்கினை மற்றைய மாகாணங்களிலும் அனுட்டானத்துக்குக் கொணடுவருவது மிகப் பிரதானம். இதுவிஷயமாக நீண்ட பரிசீலனைகள் தேவையில்லை, இவ்விதமான திருத்தங்கள் பல்லாண்டுகட்கு முன்னர் ஏற்பட்டிருப்பின் கல்வி விருத்தி பன்மடங்கு முன்னேற்றமடைந்திருக்குமே. புதிய அமைப்பின்படி மாகாணங்களில் முதியோர் கல்வி விருத்தியும் துரிதமடையுமெனக் கூறப்படுகின்றது. ஆசிரியர்களின் பயிற்சிக் கழகங்களும் விரைந்து மாகாண வித்தியா அதிகாரிகள் பொறுப்பில் விடப்படுமென்றும் கூறப்படுகின்றது. அரசினர் கல்வி விஷயமாகக் கையாளும் திருத்தங்கள் நன்கு பயன்பட்டு விருத்தியடையும்பொருட்டு பொதுமக்கள் அரசினருடன் நெருங்கி ஈடுபட்டு உழைக்க வேண்டும்.

## வானிசை

★ வசந்தன் ★

### கொழும்பு வானொலி

இசைக் கலைஞர்கள் பொருள், புகழ், அருள் என்பவற்றில் எதை விரும்பினும் அடைந்துகொள்ளலாம். அத்துடன் ஒவ்வொருவரும் இசைக் கலையின் உயர்வுக்காகச் சிறிதளவேனும் உழைப்பாராயின் கலைக்கும் அத்துறையில் ஈடுபடுபவர்களுக்கும் பேருதவி செய்பவர்களாகின்றனர்.

சொந்த நாட்டின் சிறப்புக்களை வெளிநாடுகளிற் பரவச்செய்யும் வசதிகள் வானொலி நிலையத்தாருக்குத் தாராளமாக இருக்கின்றன. இத்துறையில் நல்ல வெற்றி பெறுவதற்குக் கலைஞர்களுடனும், பொதுமக்களுடனும் நிலையத்தினர் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வது அவசியமாகும்.

திருமதி விஜயலட்சுமி
சண்முகம்பிள்ளை

இவருடைய சாரீரம் கணீரென்று ஒலித்தது. கல்யாணி இராகம் நல்ல சஞ்சாரங்களுடன் பிரகாசித்தது. இவர் நன்றாக இசைத்தட்டுகள் கேட்டிருக்கிறார் என்பது இவர் பாடிய சில சங்கதிகளிலிருந்து வெளியாயிற்று. சாருகேசி இராகப்பாட்டு நன்றாயில்லை. நன்றாகச் சாதகப் படுத்தப்படாதமையும் இராக வடிவம் பாடகிக்கு உறுதியாக இல்லாததுமே இக்குறைக்குக் காரணங்கள். காலம் செல்லச் செல்ல இக்குறைகளை நீக்கிவிட வேண்டும்.

திரு. கே. ஆர். நடராஜன்

திரு. நடராஜன் நன்றாகப் பாட முயற்சித்தமை பாராட்டற்குரியது. 'மறவாதிரு நெஞ்சமே' என்ற ஆந்தோளிகா இராகப்பாட்டு இன்னும் நன்றாகப் பாடப்படவேண்டுமாயின் அவர் பாடிய காலத்திலும் சற்று வேகமாகப் பாடியிருக்க வேண்டும். சிந்தாமக்கிரியாவும் கௌரி மனோகரியும் நன்றாக இருந்தன. பாடல்களைத் தெளிவாக உச்சரித்தார்,

திரு. கே. எஸ்.
பாலசுப்பிரமணிய ஐயர்

தம்புரா சரியாகச் சுருதி சேரவில்லை. ஐயரின் குரலும் அவ்வழியே. இவருடைய சாரீரத்தில கம்பீரமோ கனிவோ காணப்படவில்லை. இவர் நாசியாற் பாடுவதை நிறுத்தவேண்டும். அத்துடன் சாதகம் நன்றாகச் செய்ய வேண்டும். அதன் பின் வேண்டுமென்றால் ஒரு மணித்தியாலம் பாடவரலாம். 'இனி நமக்கொரு' என்றபாடல் பாடும்பொழுது ஒரு சங்கதியில் 'இனி நமாகமொரு' என்று தொனித்தது. இவர் பாடிய சாவேரி ராகம மாத்திரம் ஓரளவு நன்றாயிருந்தது. இராகமாலிகை விருத்தத்திலும பிலஹரியைத் திருப்பிப் பாடினார்? இது ஏனோ? இவர் பாடும பொழுது பயமில்லாமற் பாட முயற்சிக்கவேண்டும்.

திரு. ஈ. சுப்பையா

கிளாரினெட் — இவர் நன்றாகக் கிளாரினெட் வாசித்தார்.

வாத்தியக்கோஷ்டியுடன் பாட்டு

திரு. எம். எஸ். மகாராசன் ஆரம்பித்த விதம் கச்சேரிப்போக்கிலமைந்திருந்தது. இவருடைய நிகழ்ச்சி நன்றாயிருக்கவில்லை. சாரீரம் வசதியாயில்லை. சில இடங்களில் ஒரே அலறலாக இருந்தது. வாத்தியம் வாசித்தவர்கள் வழக்கம்போற் பாடல்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டன் தடுமாற்றம்

## இந்தியாவுக்கு பிரிட்டனில் ஆதரவு

காங்கிரஸ் தலைவர் தாண்டனின் தடுமாற்றத்துக்கு எல்லையில்லை. காங்கிரஸ் காரிய நிர்வாக சபையைத் தாம் ஒருபோதும் திருப்பி யமைக்கப் போவதில்லையாம். அதாவது பிரதமர் நேருவின் கோரிக்கைக்குத் தாம் இணங்க வியலாதென்கின்றனர். திரு. தாண்டன் சர்வாதிகாரம் படைத்தவர்போல் நடிப்பது மிக வேடிக்கையாகின்றது. இவர் தமக்கு ஏதோ விசேஷ அதிகாரம் இருப்பதாகஎண்ணுகின்றனர். காங்கிரஸ்நிர்வாக சபைக்கூட்டத்தினர் அடுத்த மாதம்10-ம் திகதிவரையில் டில்லியிற் கூடப்போகின்றனரே. அச்சபையினர் வேண்டிய மாற்றம் அவசியமென்று கூறினால் அதைச்செய்யாமலிருக்க முடியுமா? பிரதமர் நேருமீது தமக்குப் பூரண நம்பிக்கையுண்டென்றும் அவர் சொற்படியே அரசியல் நடக்கவேண்டுமென்றும் எல்லா அரசியல் ஸ்தாபனங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நேருஜியைவிட்டுவிற்க வியலுமா? நேருஜி மகாத்மா காந்தியால் தெரிந்தெடுக்கப்பட்டு இந்தியாவின் தலைவராக வைக்கப்பட்டவர். பொன்போல் போற்றப்படவேண்டியவர். எனவே திரு. தாண்டன் தாழ்ந்து போகவேண்டியதுதான். நேருவின் தலைமையே இன்று இந்திய மக்களுக்கு அவசியம்.

### யப்பான் உடன்படிக்கை

அடுத்தமாத முற்பகுதியில் பெரிய உலக மகாநாடு அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ நகரில் கூடுகின்றது. பல நாடுகள் அதிற் பங்குபற்ற இணங்கியுள்ளன. அம் மகாநாடு யப்பானுடன் சமாதான உடன்படிக்கை செய்யவே கூட்டப்படுகின்றது. அமெரிக்க அரசினரின் தலைமையில் இம்மகாநாடு ஆரம்பிக்கப்படுகின்றது. யப்பானுடன் செய்யப்படவிருக்கும் சமாதான உடன்படிக்கையின் அம்சங்கள் முன்னரே வெளியிடப்பட்டன. அவ்வுடன்படிக்கையில் சிலபிரதான திருத்தங்கள்

### இந்தியா


வேண்டுமென்று இந்திய அரசினர் மிகஆர்வத்துடன் கேட்டனர். அதற்கு அமெரிக்காவும் வேறு சிலநாடுகளும் விரும்பவில்லை. எனவே இந்தியா அம் மகாநாட்டில் பங்குபற்ற மறுத்துவிட்டது. இது விஷயமாக மிக்க பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. இந்தியா கேட்ட இரண்டுகேள்விகள் பிரதானமானவை. 1. சமாதானஉடன்படிக்கையின்பின்னர் அமெரிக்க சைனியங்கள் யப்பானைவிட்டு விலகவேண்டும். 2. போமோஸாத்தீவு சீனத்துக்குக்கொடுக்கப்படவேண்டும். இக்கேள்விகட்கு அமெரிக்கா இணங்கவில்லை. எனவே இந்தியா இச் சமாதான மகாநாட்டிற் கலந்து கொள்ளப்போவதில்லை. யப்பான் பழையபடி சுதந்தரத்தைப்பெற்றபின் இந்தியா அந்நாட்டுடன் சமாதானஞ்செய்யுமாம்.

### பொய்வேடம்

காஷ்மீர் விஷயமாகப் பாகிஸ்தான் செய்துவந்த பொய்ப்பிரசாரத்தை உலகத்திலுள்ள அனேக நாடுகள் இதுவரையும் நம்பிவந்தன. இப்போது சிறிது சிறிதாக உண்மையை அறிந்துவிட்டன. எல்லா உண்மைகளும் அறிந்தபின்தான் பாகிஸ்தானின்பொட்டுக் கேடு வெளியாயிற்று. இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள் முன்வந்து பாகிஸ்தானுக்குக் கொடுத்த சாட்டைதான் நன்மையைக் கொண்டுவந்தது. இந்தியா சமயத்தை ஆதாரமாகக் கொள்ளாத அரசியலையுடையது; எல்லா வகுப்பினரும் சாதியினரும் சமமாக நடத்தப்படுகின்றனர். அரசியலில் முஸ்லீம்களுக்குப் பொறுப்புவாய்ந்த உத்தியோகங்கள் வழங்கப்படுகின்றன; பிரதமர் நேருவின் தலைமையில் தமக்கு முழு நம்பிக்கையுண்டு என்று இவ்வாறெல்லாம சமீபத்தில் இலக்குமணபுரியில் நடந்த முஸ்லீம் மகாநாட்டில எடுத்துக் காட்டினர். மேலும் இப்போது பாகிஸ்தான் காஷ்மீர் தனக்கு வேண்டுமென நிற்பது காஷ்மீர் சமஸ்தானத்தின் நன்மைக்காகவன்று. பாகிஸ்தான் தனது சொந்த நன்மையை இலக்காகக்கொண்டே இப்படிச்செய்கின்றது.

### யுத்தம் ஏற்படுமாம்

பிரிட்டனில் நடைபெறும் பிற்போக்குக் கட்சியினரும் அவர்களது பத்திரிகைகளும் நிச்சயமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம் ஏற்படுமென்று கூறுகின்றன. காஷ்மீர் பாகிஸ்தானுக்கே உரிமையுடையதாம. இந்தியாசெய்வது பிழையாம். இந்தப் பிற்போக்குவாதிகட்கு இந்தியாவில் இன்னும் அவேஷம்தான். பிரிட்டிஷார் கையிலிருந்து இந்தியா தவறியது இவர்கட்கு விருப்பமில்லை. பாகிஸ்தானுக்கு உசார் கொடுத்து இந்தியாவுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டுமென்று எண்ணுகின்றனர். ஆனால் உண்மையாக இந்தியாவில் மதிப்புடைய பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் இந்தியாவின் கொள்கையை மெச்சுகின்றனரன்றிக் குறைகாணவில்லை. பெதிக் லோறன்ஸ் பிரபு, ஹொறூஸ் அலக்ஸாண்டர் முதலியவர்கள் இந்தியாவுக்கே காஷ்மீர் போகவேண்டுமென்கின்றனர். காஷ்மீர் மக்கள் எண்ணப்படியன்றிப் பாகிஸ்தான் அரசினர் நினைத்தபடி எதுவும் செய்துவிடவியலாது. முஸ்லீம்கள் பெரும்பான்மையாக அங்கேவசிப்பதால் அச்சமஸ்தானம் பாகிஸ்தானத்துக்குப்போக வேண்டுமென்பதைப் பிரிட்டிஷ் அரசியற் தலைவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.




# சுயபாஷா யோசனை

## தமிழ், சிங்கள மாணவர்கள் கஷ்டம்

30-8-51

ஸ்தான்புல் என்ற இடத்தில் நடைபெறவிருக்கும் அகில பாராளுமன்ற மகாநாட்டிற் கலந்துகொள்வதற்காகப் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் திரு. அல்பேட் பீரிஸ் அவர்களைத் தலைவராகக்கொண்ட தூதுக்கோஷ்டி புதன்கிழமை புறப்பட்டது. இதில் செனட்டர் சேர் ராசிக் பரீத், திரு. எச். எஸ். ரத்வத்தை, திரு. எம். சேனநாயக்க, திரு. பி.எச். வில்லியம் ஆகியோரும் கலந்துகொள்வர். ஐக்கிய தேசியக் கட்சியின் உதவிக் காரியதரிசி திரு பீற்றர் மெல்லவாராச்சி தூதுக்கோஷ்டியின் காரியதரிசியாக இருப்பார். இம் மகாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகப் பிரச்னை, அகதிகள் பிரச்னை ஆகியவை விவாதிக்கப்படும். உலகத்தின் பலபாகங்களிலும் வசிக்கும் மக்களைப் பாதிக்கும் இப் பிரச்னைகள் சம்பந்தமாக முக்கியமான முடிவுகள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுயபாஷா பாடசாலை

கொழும்பிலுள்ள ஹவெலக் வீதியில் ஒருசிறந்த சுவபாஷா உயர்தர சிரேஷ்ட பாடசாலையை நிறுவக் கல்வி மந்திரி திட்டமிட்டுள்ளார். இதுபற்றிப் பரிசிலனை செய்யும்படி வித்தியாதிபதி டொக்டர் ஹவுல் கேட்கப்பட்டுள்ளார். உயர்வகுப்புகள் சுயபாஷையில் நடைபெறுமாம். நல்ல யோசனைதான். ஆனால் இது அநுபவ சாத்தியமா என்பதுதான் கேள்வி. முதலிலே பாடபுத்தகங்கள் சுயபாஷையில் அதுவும் சிங்களத்தில் இல்லை. மேலும் ஐந்தாம் வகுப்புவரை சுயபாஷையில் கற்றுவரும் தமிழ் சிங்கள மாணவர்கள் ஆறும் வகுப்பில் திடீரென ஆங்கிலத்தில் பாடங்கள் போதிக்கப்படுகின்றனர். இதனால் மாணவர்கள் படும் கஷ்டமோ சொல்லுந்தரமன்று. சுவபாஷையென்று கூக்குரல் போட்டாலும் மாணவர்கள் ஆங்கில எஸ். எஸ். சி. வகுப்புகளிற் சேர்வதில்மோகங் கொண்டிருக்கின்றனர். அதுவும் ஆங்கிலக் கல்வி இலவசமாக அளிக்கப்படும் பொழுது கிராமப்பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் சேர்கின்றனர். நிலைமை இவ்வாறிருக்க, சுவபாஷா உயர்தர பாடசாலை எவ்வித பயனைத்தான் அளிக்குமோ தெரியவில்லை. அரசாங்கப்பகுதிகளில் தமிழையும் சிங்களத்தையும் கடிதப்போக்குவரத்தில் உபயோகிக்கவேண்டுமென்ற கொள்கையும் இவ்வாறே திட்டமிடப்படாது எற்றுண்டு செல்கிறது. 25 வருடத் திட்டமொன்றை எதிர்கால அபிவிருத்தி நோக்குடன் தயாரித்தால் பயனுண்டு. அல்லது இது அடுத்த தேர்தலில் வாக்காளரைத் திருப்திசெய்ய எழுந்த இடங்களாகவே முடியும். இது குதிரைக்கு முன்னால் வண்டியைத்தொடுப்பது போலாகிவிடும்.

### சித்திரப் படக்காட்சி

பிரபல சைத்திரீகரான திரு. ஏகேற்றன் கூப்பரின் சித்திரப்படங்களின் காட்சியைச் சென்ற வாரம் கலாபவனத்தில் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்கா திறந்து வைத்தார். இப்படக்காட்சியில் பிரதமரின் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனைப் பார்ப்பதற்குப் பலர் சென்றனர். பிரதமரின் படம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் தொங்கவிடப்படுமாம்.

### பழையபடி பீப்பாக்கள்

கொழும்பிலுள்ள காலி வீதியிற் பழையபடி பீப்பாக்கள் காட்சியளிக்கின்றன. தெருவின் மத்தியில் 'தீவுகள்' எனப்படும் சிறு நீளப் பீடங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றைப் பாதுகாக்கப் பீப்பாக்கள் வைக்கப்பட்டுள்ளன. ரறற் வீதியிற் சைக்கிளில் செல்வோருக்குப் பிரத்தியேக பாதை வீதியில் ஒரு பகுதி பகுத்து விடப்பட்டுளளது. இனிமேல் வீதியிற் கண்டபடியெல்லாம் ஓடாமல் தங்களுக்குரிய பகுதிகளால் சைக்கிளிற் செல்லவேண்டும்.

### ஆசிரியர்களின் புதிய தலைவர்

கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபரும் முன்பு சிவில் சேர்விஸ் பதவி வகித்தவருமான ஜனுப் ஏ. எம். ஏ. அஸீஸ் அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிபாலனத் திறமையும் ஆசிரிய அநுபவமும் உள்ள இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டது ஆச்சரியமன்று. ஆசிரிய வுலகில தீர்க்கப்படவேண்டிய அநேக பிரச்னைகள் தோன்றியிருக்கும் இத்தருணத்தில புதிய தலைவர் சிறந்த உதவிபுரிவார் என எதிர்பார்க்கலாம்.

### ஸ்ரீ இ. கிருஷ்ண ஐயர்

சென்னையிலுள்ள பிரபல கலை விமர்சகரும நியாயவாதியுமான திரு. இ. கிருஷ்ண ஐயர் அவர்கள் கொழும்பில நடைபெறும் இரண்டாவது இலங்கை நடன விழாவின இந்திய நடனப் பகுதிக்குத தலைமை தாங்குவதற்காக 30-8-51-ல் விமானமார்க்கமாகக் கொழும்பு வந்துசேர்வார் என அறிகின்றேன்.

### மத்திய மாகாணத் தமிழ்ச் சங்கம்

கண்டியிலுள்ள மத்திய மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆரம்ப விழாவும், பாரதி விழாவும் 16-9-51ல் நடைபெறுமெனத் தெரிகின்றது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 7129

உடுவில்
1. வேலுப்பிள்ளை அல்பிறெட் துரைராசா
2. பெண் டெஸ்சி செபமணி

வழக்காளிகள்

உடுவில்
பொன்னையா குமாரசூரியர்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 7129-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1951-ம ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 27-ந் திகதி (27-9-51) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:-** முதல் வட்டி ரூபாய் 1744-20ம், இதில் ரூபாய் 1500க்கு 28-9-50 திகதி தொடக்கம் 23-11-50 திகதி வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும இறுபடும வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும, கோட்டுச் செலவு ரூபாய் 185-07 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலை "பாலிச்சதப்பை" நிலப்பரப்பு பன்னிரண்டு (12)ம் கல் வீடும், செய்பயிர் வான்பயிர்களும். கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும், வழியும, வாய்க்காலும். இதில் மேற்குப் பக்கமாக [illegible] (6)ம் அதற்குட்பட்டவைகளும். எல்லை: கிழக்கு, தம்பு சரவணமுத்து பெண் திலகவதியின் ஆதனம. வடக்கும் மேற்கும் மானிப்பாய் கைதடி றோட்டு. தெற்கு வில்லவராயனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு H 240/213.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை, 23-8-51

[4395]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 2128/A.

வண்ணார்பண்ணை மேற்கு
நாகமுத்து நமசிவாயம்
இடைக்காடர்.

வழக்காளி

ஊர்காவற்றுறை சரவணை கிழக்கு
முருகப்பர் சின்னத்துரை

எதிராளி

யாழ்ப்பாணம் றிக்வெஸ்ற் கோட்டில் 2128/A-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1951-ம ஆண்டு செப்டெம்பர் (புரட்டாதி) மாதம் 26-ந் திகதி (26-9-51) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல் வட்டி ரூபாய் 300-ம், இதில் ரூபாய் 250-க்கு 5-3-51 திகதி தொடக்கம் 10-5-51 திகதி வரைக்கும் 100-க்கு 6 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 37-75 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணை கிழக்கு சரவணையிறை "வேப்பங்குளி" நெற்பரப்பு 50. இதில் மேற்குப் புறமாக நெற்பரப்பு 25 இதில் கிழக்குப் புறமாக கிந்தமாக நெற்பரப்பு $12\frac{1}{2}$ம் எல்லை: கிழக்கு, சின்னததம்பி பசுபதிப்பிள்ளையின் ஆதனம். வடக்கு, வீ. வேலாயுதபிள்ளை பெண் பொன்னம்மாவின் ஆதனம். மேற்கு, கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை பெண் தங்கம்மாவின் ஆதனம். தெற்கு, குறித்த எதிராளிக்கும் வேலுப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குமுரிய ஆதனம். இதடங்கலும். முற்பதிவு C. $\frac{238}{174}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed
Auctioneer
தெல்லிப்பழை
8-8-51

[4394]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதவதி

சொக்கன்

ஷேக்ஸ்பியரின் லுக்ரீஷியா என்ற பாத்திரத்தைத் தழுவி எழுதப்பெற்றது

### காட்சி 3

(புனிதவதி நிலவிலமர்ந்து இராட்டையில் நூற்றுக் கொண்டிருக்கிருள். அடிமை வருகிருள்.)

**அடிமை:** அம்மா! இளவரசர் அரண்மனைக்குத் திரும்பும் வழியில் இங்கும் வந்திருக்கிருர். உள்ளே வருவதற்குத் தங்கள் உத்தரவை எதிர்பார்க்கிருர்.

**புனித:** கெட்டிக்காரன்! அவரை வாசலிற் காக்கவைத்தா வந்திருக்கிருய்? சரி! நானே வருகிறேன்.

(வெளிவருகிருள். வெளியே குதிரையை வாசலில் நின்ற ஒரு மரத்தில் கட்டிவிட்டு அருணன் நிற்கிருன்.)

**புனித:** வாருங்கள் இளவரசே! தங்களை வெகுநேரம் காக்க வைத்து விட்டேன். மன்னியுங்கள்.

**அரு:** பரவாயில்லை, (உள்ளே செல்கிருர்கள்.)

**புனித:** இப்படி அமருங்கள்.

(ஆசனத்தமருகிருன். புனிதவதி அறையின் ஒரு மூலையில் நிற்கிருள்,

**அரு:** சகோதரி! தாங்களும் அமரலாமே! நீங்கள் கால் கடுக்க நிற்பதால் உங்கள் அதிதியின் உள்ளத்தை வேதனைப்படுத்துபவராவீர்கள்.

(புனிதவதி நாணத்தோடு ஒரு ஆசனத்தில் வந்திருக்கிருள்.)

**அரு:** (தயங்கித் தயங்கி) இன்று நான் உங்கள் அதிதியாகத் தங்கலாமல்லவா? தயாளனும் இல்லை.

**புனித:** எனது இல்லம் செய்த பாக்கியம் அது என்று கருதுவேன். கணவர் இல்லாவிட்டாலென்ன? நான் இருக்கிறேன். என் நாதரின் நண்பர் எனக்கும் அன்பரல்லவா? தயக்கமேன?

**அரு:** தங்கள் அன்புக்கு என் நன்றி. சகோதரி! பக்கத்தூரில் ஒரு விழாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பினேன்! நேரமோ இரவாகி விட்டது. குதிரையும் களைத்துவிட்டது. அதனுல்தான் தங்களுக்குச் சிரமம் கொடுக்கவேண்டி நேரிட்டது.

**புனித:** இப்படிச் சிரமம் சிரமம் என்று சொல்லி என் உள்ளத்தைப் புண்படுத்தாதீர்கள் இளவரசே! ஏதோ இந்தக் குச்சிலில் எங்கள் உருசியற்ற உணவில் பங்குகொள்ள இளவரசரே வந்திருக்கிருர் என்பதில் நான் எவ்வளவோ பெருமை அடைகிறேன்.

**அடிமை:** (வெளிவந்து) உணவு தயாராகி விட்டது அம்மா!

**அரு:** அடேயப்பா! உங்கள் சமையற்காரர்கள் நளமகாராஜனைக்கூட வென்றுவிடுவார்கள்போலிருக்கிறதே. இவ்வளவு விரைவில் சமையலா?

**புனித:** புகழ் மொழிகள் இருக்கட்டும். முதலில் எழுந்து ஸ்நானம் செய்து உடைகளை மாற்றிக்கொள்ளுங்கள் இளவரசே!

யாரங்கே?

**அடிமை:** என் அம்மா!

**புனித:** இளவரசரை அழைத்துச் சென்று ஸ்நானம் செய்வித்து வா.

(அருணனும் அடிமையும் ஸ்நான அறைக்குச் செல்கிருர்கள். புனிதவதி உள்ளே செல்கிருள்.)

திரை

### காட்சி 4

(உணவு முடிந்து அருணன் வெளிவந்து ஆசனத்திலிருக்கிருன். புனிதவதி தாம்பூலமளிக்கிருள்.)

**அரு:** அறுசுவை உண்டி, அமுதினும் இனிது. அதைப் பரிந்தளிக்கும் மங்கையின் மலர்முகம் அதனினும் இனிது. உண்மையாகச் சொல்கிறேன். சகோதரி! இத்தகைய உபசாரத்தை நான் எங்குமே பெற்றதில்லை. தங்களுக்கு நன்றிகூற வகையற்றுத் திண்டாடுகிறேன் நான்.

**புனித:** (மாற்றம் ஒன்றுமில்லாத மனோபாவத்தோடு) உபசார வார்த்தைகளை இனியும் தாங்க என்னுல் முடியாது இளவரசே!

**அரு:** அனிச்ச மலரினும் மங்கையர் உள்ளம் மெலியது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதற்கு திருஷ்டாந்த சாட்சியை இன்றுதான் கண்டேன்.

(சிறிது மௌனம்.)

**அரு:** தங்கள் இசையின் பெருமையைத் தயாளன்மூலம் அறிந்தேன். என் வேண்டுகோள்...?

**புனித:** நான் பாடவேண்டும் என்பதுதானே! இதோ வீணை எடுத்து வருகிறேன். (உள்ளே செல்கிருள்.)

**அரு:** (தனக்குள்) தயாளன் சொன்னவை அனைத்தும் உண்மையே. மின்னல் இடையும், கன்னல் மொழியும் அமைந்த அழகரசி இவள். கவிஞனின் கவிதைக்கு உரு; காமனின் வெங்கணைக்குச் சாயல்; சிற்பியின் கைதேர்ந்த கைகளுக்கு உயிர் இவள். தயாளன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!

(புனிதவதி வருகிருள். ஒரு பக்கலில்அமர்ந்து பாடுகிருள்,)

(பாடல் முடிந்ததும்)

**அரு:** தயாளன் தன் கவித்துவத்திலே தோல்வியடைந்துவிட்டான்.

**புனித:** தாங்கள் சொல்வதின் அர்த்தம்?

**அரு:** கவித்துவத்திற்கழகு மிகைபடக்கூறல். இல்லாததற்கெல்லாம் 'ஆஹா, ஊஹா' என்றுவருணிப்பவர்கள்தாமே கவிஞர். ஆனுல் தன் மனைவியை வருணித்துக் கூறிய தயாளன் குறைபடவே சொல்லியிருக்கிருன் என்பது இப்போதுதான் தெரிகிறது.

**புனித.** அதிதியர்க்கு இது அழகல்ல. அடடா! வந்ததற்கிடையிற்ருன் எத்தனை விதமாகப் புகழ்ந்துவிட்டீர்கள்? சரி! நேரமாகிறது. சென்று சயனியுங்கள் இளவரசே! அதோ தங்களுக்கெனத் தயாரிக்கப்பட்டிருக்கும் படுக்கை. அமலன் தங்களுக்கு நிம்மதியான நித்திரை அளிப்பாராக! நான் வருகிறேன்.

(புனிதவதி செல்கிருள்.)

**அரு:** (சிரிப்புடன்) நிம்மதியான நித்திரை.

திரை

### காட்சி 5

இடம்: தயாளனின் வீடு. அருணன் விருந்தினனுக வந்திருக்கிருன். அருணனுக்குக் கொடுக்கப்பட்ட அறையில் இருந்து அருணன் யோசிக்கிருன். நல் மனமும் தீ மனமும் போரிடுகின்றன.

**நல்மனம்:** அருணு! தயாளனில்லாத சமயத்தில அதிதி என்ற வேஷத்தில் நீ இங்கு வந்திருக்கிருய்! கள்ளமற்ற வெள்ளையுளளம் கொண்ட புனிதா உன்னை எவ்வாறெல்லாம் உபசரித்தாள்! கவனம்! அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாகாதே.

(தயாளன் முன்னர் கூறியவை நினைவில் வர, அவன் அவற்றை நினைக்கிருன்.)

நிலவு ஒளியிடும் அவள் முகத்திலே, தாரகை கண் சிமிட்டும் அவள் விழிகளிலே, பவளமும் முத்தும் கொழிக்கும் அவள் உதடுகளிலே, சிலம்பு கோலமிடும் அவள் உள்ளத்திலே.

**தீமனம்:** இவளை இழக்கப் போகிருயா? இந்தத் தெய்விக அழகியை இழக்கப் போகிருயா? சிந்தித்துப் பார். மலர் மலர்வது மாய்ந்து மடியவல்ல, மணந்து இன்புற. அழகு சிருட்டிக்கப்படுவது அழிவை உணர்த்தவல்ல, ஆனந்தத்தை அனுபவிக்க, ரஸிக்க. இவை உனக்கு வேண்டாமா? உன் இளமைத் துடிப்பு அவமே போவதா? நீ அரசன்; முன் வைத்த காலைப் பின் வையாதே. போ போ.

(போகிருன், நல்மனம் ஏதோ சொல்லுகிறது; திரும்புகிருன்.)

**நல் ம:** அருணு! கனி ஒன்றற்காகக் காய்க்கும் மரத்தையே அழிக்கப் போகிருயா? முடியில் தொட்ட அடுத்த கணம் மடிவேனென்று தெரிந்த தரித்திரன் அதைத்தொட முயல்வானு? நீ அறிவாளி. காமத்தால் கருத்தழியாதே. நில் நில்.

**தீ ம:** [illegible] புனிதவதியைப் [illegible] போகிக்கிருயோ கோழை? காலப் பாதையிற் செல்லும் வாழ்க்கைத் தேரைத் தடுத்து நிறுத்தும் மிண்டிகளடா அவை! கண்ணிற் பேதைமையையும் கருத்தில் இருளையும் மூட்டி வைக்கும் ஏதுக்களடா அவை! வேலையற்ற வாய்வேதாந்திகளின் விதண்டாவாதக் கூச்சல்களடா அவை! இவற்றிற்குப் பயப்படுகிருயா? முன்னேறிச் செல்.

பால் சொரியும் நிலவு உன்னைப் பரிந்தழைக்கிறது. தேன்மணக்கும் தென்றல் உன்னைத் தேடி அழைக்கிறது. முல்லை முறுவலிக்குப; குமுதம் மோகனக் கண்சிமிட்டுப; புனிதவதியின் பூங்கரங்களைப் பற்றிக் காதல்பேச இதுதான் தக்க சமயம். போ போ.

(அருணன் போகிருன்)

**நல் ம:** அருணு! போகிருயா?

**அருணன்:** வேண்டாம், என தீர்மானத்தைக் குழப்பாதே. தீது வருக. நலம் வருக. அக்கறையில்லை. நான் போகத்தான் போகிறேன்.

(போகிருன்)

திரை

### காட்சி 6

புனிதவதியின் அறைக்குத் தீபத்துடன் பதுங்கிப் பதுங்கி அருணன் போகிருன். திரையை விலக்கிப் புனிதாவைப் பார்க்கிருன். அவளைத் தொட அவன் கைகள் ஏவுகின்றன. ஆயின் நடுங்குகின்றன.

**அரு:** தூக்கத்தில கூட இவள எத்தனை அழகாய் இருக்கிருள்! மின்னும இந்தக் கண்களும் கண்ணுடிக் கன்னங்களும் பவள இதழ்களும் கேவலம தயாளனுக்குச் சொந்தம.


**புனித:** (எழுதல்—திடுக்குற்று) ஆ! தாங்களா? இந்த நேரத்தில் இங்கு ஏன் வந்தீர்கள்?

**அரு:** காதற் றேவதையைப பூஜிக்கக் கால நேரமொன்றுண்டா?

**புனித:** (திடுக்குற்று) என்ன?

**அரு:** புனிதா! என் விழிக்கு விருந்தாகும் மாதரசே! என இன்பததிற்கும் விருந்தாக மாட்டாயா? இந்தஅர்தத

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




**ரஸ்புடீன்:** ஆசிரியர்: 'அரங்கண்ணல்' பிரசுரம்: திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி; விலை: 1-8-0.

கடவுளின் திருநாமத்தைச் சொல்லி மக்களை வஞ்சித்துத் தோட்டி முதல் தொண்டைமான் வரையில் தனது அகந்தையால் மாயப்படுகுழியில் வீழ்த்தி, அக்கொடுஞ் செயல்களுக்கேற்ற தண்டனையுமடைந்த மனிதவுருக் கொண்டுநடமாடிய பேயான ரஸ்புடீன் என்னும் ருஷியா தேசத்துப் போலிச் சாமியாரின் திருவிளையாடல்களைக் கூறும் இச் சரித்திரச் சுருக்கம், உணர்ச்சி ததும்ப ஆவேசம் பொங்க எழுதப்பட்டிருக்கிறது. இதை முதன் முறை படிக்கும் எவரும் ஆச்சரியமும் ஆத்திரமும் அடைவர் என்பதில் ஐயமில்லை. 1917-ம் ஆண்டில் ருஷியாவிற் புரட்சி ஏற்பட்டதற்கு ரஸ்புடீனின் அதிகாரமும், சகிக்க முடியாத அட்டூழியங்களும் துணைபுரிந்தன. தனது முகவுரையில் இந் நூலாசிரியர் வெளிப்படையாக, சாதுக்கள், சந்நியாசிகள், ஜீயர்கள், மடாதிபதிகள் என்போர் மூடநம்பிக்கைகளையும் மதப் பித்தையும் தங்கள் 'மோகனவலை'யாக்கி மக்களைப் படுகுழியில் வீழ்த்தும் 'திருச்சேவை'யை இன்றும் புரிந்து வருவதாய்க் கூறுகிருர். இக்கூற்றைத் தென்னிந்திய சரித்திரமறிந்த எவரும் அப்படியே ஒப்புக்கொள்ளமுடியாது. புண்ணிய பூமியாகிய நம் பரத கண்டத்தில், ஸ்ரீ ராமகிருஷ்ணர்களும், மகாத்மாக்களும், ரமண ரிஷிகளும், சைவ சித்தாந்தப் பெரியோர்களும் அவதரிப்பார்களே யல்லாது ரஸ்புடீனைப் போன்றவர்கள் தோன்றியதுமில்லை, இனித் தோன்றப்போவதுமில்லை.

**இருளும் ஒளியும்:** ஆசிரியர்: தில்லைவில்லாளன்; பிரசுரம்: திராவிடப்பண்ணை, தெப்பக்குளம், திருச்சி; விலை: ரூபா 1—8—0.

இக் கதையின் போக்குச் சுவாரஸ்யமாக அமையவில்லை. ஆசிரியர் சமூக சீர்திருத்தத்தில் ஒரு தீவிரவாதியாய்க் காணப்படுகிருர். கலப்பு மணத்தை ஆதரித்தும், சமய விஷயமான மூட நம்பிக்கைகளைத் தாக்கியும், பிரசங்கங்கள் செய்வதற்காகவே கதை ஒரு சாட்டாக உபயோகப்படுகிறது. வேறு சிறப்புமிக்க அம்சங்களைக் காணேம். இப் புத்தகத்தில் அச்சுப் பிழைகள் மலிந்து கிடப்பதுடன் விலையுமதிகமென்றே தோன்றுகின்றது.

—ஸி. எஸ். ஜி.


## முள்ளுக் கம்பி
## விற்பனைக்கிருக்கிறது

இப்போதுதான் கப்பலிற் சிறிதளவு தொகை வந்திருக்கிறது

225—250 யார் கொண்ட சுருள் ஒன்று விலை ரூபாய் 35-00

வாங்குவதற்கு முந்திக்கொள்ளுங்கள்.

சாமுவேல் சன்ஸ் அண்ட் கொம்பனி லிமிற்ரெட்
பழைய சோனகதெரு :: கொழும்பு

[4393—iii]



## காங்கேசன்துறையில்

திறமான பல ரக சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்ரேடிங் கம்பனி

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ" :: டெலிபோன்: நம்பர் 25

[4390]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருமையான மருமக்களே,

நீங்கள் தினமும் தேநீர் அருந்தி வருகின்றீர்கள் அல்லவா? சில பள்ளிக்கூடங்களிற் கூட அங்குள்ள பிள்ளைகளுக்குத் தேநீர் இலவசமாகக் கிடைக்கின்றது. இலங்கைக்கு அதிகமான பணத்தைக் கொடுப்பது தேயிலைச் செய்கையே. இலங்கையில் ஏறக்குறைய 5,55,000 ஏக்கர் பூமியில் தேயிலை பயிரிடப்படுகின்றது. மலைநாடுகளிலேயே தேயிலைச் செடி செழிப்புற்று வளர்கின்றது. தேயிலைப் பானத்தைச் சீனத்து மக்களே முதன்முதல் அருந்தினர் எனத் தெரிகின்றது. 1825-ம் ஆண்டிலேதான் இலங்கையிலுள்ள மலைநாடுகளிலும் தேயிலை வளர்ந்து வருகின்றதென்ற விஷயம் தெரியவந்தது. இன்று இலங்கைத் தேயிலைக்கு உலகத்தில் நல்ல மதிப்பு இருந்து வருகின்றது.

கேசரிமாமா

## தன் கையே தனக்குதவி

**மே.267 ந. சிவபாதம்**

மருமகன் ந. சிவபாதம் (மே.267) என்பவர் சென்ற மாதம் 22-ந் திகதி கொழும்பு வானொலியில்நிகழ்த்திய பேச்சு இது. "தன் கையே தனக்குதவி— இதனைக் கிராம அபிவிருத்தியில் எவ்வாறு பயன்படுத்தலாம்" என்பதுபற்றிக் கொழும்பு வானொலித் தமிழ்ப் பகுதியினர் ஒரு வியாசப்போட்டி நடாத்தினர். அதில் இக் கட்டுரைக்கு இரண்டாவது பரிசு கிடைத்தது.

—கேசரி மாமா

மக்கள் பிறரை எதிர்பாராது இருக்கவேண்டுமானால் அவர்கட்குப் பணம் அவசியம். பணம் சேமித்து வைக்கும் பழக்கம் ஒவ்வொருவர்க்கும் சிறுவயதிலேயே உண்டாக வேண்டும். சேமிப்பைப்பற்றியும், கிராம மக்கள் பணம் வீண்போகாது தாமே தமக்கு வேண்டியவற்றைச் செய்து முடிக்கும் முயற்சிகளையும் விளக்கவேண்டும்.

கிராமத்தார் நோயின்றியும், சந்தோஷமாகவும் இருக்கத் தெண்டித்தல் அவசியம். இதற்குக் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து அக்கிராமத்தின் சுகாதார முறைகளைக் கண்காணித்தல் வேண்டற்பாலது. வீட்டுத் தோட்டங்களை உண்டு பண்ணும் விஷயத்தில் ஒவ்வொருவரும் முனையவேண்டும்

பாடசாலைகள்தோறும் மாணவர்கட்குப் பிரயோசனமான தொழிற் கல்வியைக் கற்பித்தல் அவசியம். தொழிற் கல்வியைக் கற்றால் தமக்கு வேண்டிய பொருள்களைச் செய்துகொண்டு இன்னொருவர் கையை எதிர்பாராது இருக்கலாம். வேலையில்லாது சோம்பற் தனமாக இருக்கும் நேரங்களில் ஒவ்வொருவர்க்கும் சுறுசுறுப்பையும் தேக திடத்தையும் அறிவையும் தரக்கூடிய விளையாட்டையோ, வேலைகளையோ, கல்வி வளர்ச்சியையோ விருத்தியாக்கும் நிலையங்களை ஏற்படுத்திச் சனங்களை ஆங்கு சேரப் பழக்க வேண்டும். நல்லினக் கோழிகளையும், கால்நடைப் பிராணிகளையும்வளர்த்து அதனால்ஊதியமடையக்கூடிய முறைகளைச் சனங்கள் கையாளவேண்டும்.

கைப்பணி வேலைகளை ஒவ்வொருவரும் செய்து அவற்றைக் கிராம முன்னேற்றச் சங்கமூலம் மற்றையோர்க்குக் கண்ணியமான முறையில் விற்றுப் பணஞ் சம்பாதிக்கப் பழகவேண்டும்.

கிராம முன்னேற்றச் சங்கங்கள் வீட்டிற்கொரு கைத்தறியை உதவி எல்லோரையும் நூல் நூற்கப் பழக்கிக் கொள்ளவேண்டும். இப் பழக்கம் காலப்போக்கில் அவர்களை ஊக்குவித்துத் தமக்குத் தேவையான உடைகளைத் தாமே நெசவு செய்ய வசதியளிக்கும்.

ஒழுங்கைகள், தெருக்கள், குளங்கள் ஆக்குவதிலும், திருத்துவதிலும் ஒப்பந்தமூலம் எடுப்போர் சாதாரண முறையில் வேலைகளைச் செய்து கூடிய இலாபத்தைக் கொண்டு போகிறார்கள். இவ்வேலைகளைக் கிராமச் சனங்கள் செய்து முடித்தால் நல்ல முயற்சியும் ஒற்றுமையும் ஆவதுடன் சிக்கிரத்தில் வேலை முடிந்து பணத்தில் ஒருபகுதி மிச்சமுமாக இருக்கும். இவ்வித ஒற்றுமையால் கிராமங்கள்தோறும் கொலை, களவு, சூது நடைபெறாது தடுக்கத்தக்க தொண்டர் படையையும் ஏற்படுத்த முடியும்.

ஒரு நிலத்தின் எல்லைக்காக வல்லடி வழக்குப் பேசிப் பெருவாரியான பணத்தைச்செலவு செய்கின்றனர். இவ்விஷயங்களைக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் கவனித்துச் சுமுகமான முறையில் நடத்தினால் பணம் மிஞ்சுவதுடன் ஒற்றுமையும் ஓங்கும்; அன்பும் பெருகும்.

மேற்கூறிய துறைகளில் முன்னேற்றமடைந்துவரும் தேசங்களின் விருத்தாந்தங்களை வானொலிமூலம் விளக்குவதற்கு அரசாங்கத்தார் கிராம முன்னேற்றச் சங்கமூலம் வானொலிகளைக்கொடுத்து உதவுவது சனங்களுக்கு மிகவாய்ப்பானதாகும். வானொலிமூலமும் பிரசங்கமூலமும்இவ்விஷயங்களைச் சனஙகளுக்கு விளக்குவதால் அவர்கட்கு உற்சாகமும் பணமும் நிச்சயமாக உண்டாகுமென்பதை அறியலாம்.

### பிறந்ததின வாழ்த்துக்கள்

**2-9-51—8-9-51**

கி.83. இ. பாஸ்கரமூர்த்தி, மே.184- கு. சா. குலரத்தினம், கி.235. க. பரமேஸ்வரன், மே.277. க. வேலுப்பிள்ளை, கி.287. மி. இரத்தினதேவி. கி.315. அ. ஞானரஞ்சிதம், மே.376. தி. இ.சந்தானகோபால சர்மா, மே.394. த. ஜெயலட்சுமி, மே.408. த. புவனேந்திரன். கி.434. சா. பஞ்சாட்சரசர்மா.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

### மாமா பதில்

**மே.320 சு. நடராசா:** 'சிகரட்' சுருட்டுப் புகைக்கக்கூடாதென்பதை நீர் உணர்ந்திருப்பதையறிந்து உண்மையாகவே மகிழ்ச்சியடைகின்றேன். இது சம்பந்தமாக நீர் எழுதி அனுப்பியசம்பாஷணை நல்லது.

**மே.267 ந. சிவபாதம்:** ஈழகேசரி பாலர் பகுதியின் மகிமையை அறிந்து நீர் பெருமையடைவதுபோலவே, உமது வெற்றியையும் அறிந்து நான்பெருமையடைகின்றேன் கிராம வானொலிச் சங்கங்கள் ஏற்படுத்தும் முயற்சியில்உமக்கு மேலும் வெற்றி கிடைக்குமென நம்புகின்றேன்.

**மே.563 வே. நவரத்தினம்:** உமது கட்டுரை கிடைத்தது. இராஜாஜீயைப்பற்றிச் சுவையாக எழுதியிருக்கின்றீர்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்:**
க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

**இந்தியா நோட்டுவட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.**

**கடன்:**
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்


[4382]



உங்கள் சருமம் ஒவ்வொரு
தினமும் அதிக அழகு
பெறுவதைப் பாருங்கள்





ரெக்ஸோனுவிலிருக்கும் **கேடில்** தான் உங்கள் சருமத்திற்கு புது ஆரோக்கியமும் புது தூய்மையும் புது எழிலும் தருகிறது.



தினமும் குறைந்தபக்ஷம் இரண்டுமுறை ரெக்ஸோனு உபயோகியுங்கள். கேடில் அடங்கிய அதன் நுரையை மெதுவாக சருமத்தில் தேய்த்து பிறகு கழுவுங்கள். ரெக்ஸோனுவிலிருக்கும் கேடில் சருமத்தை மாசற்றதாகவும் மழமழப்பாகவும் அழுத்தமாகவும் செய்வதோடு புது ஆரோக்கியமும், புது அழகும் பெறச்செய்யும். வெப்பம், குளிர், காற்று, புழுதி இவைகள் பாதிக்காமல் சருமத்தை கவர்ச்சியுடையதாக இருக்கச்செய்கிறது.

ரெக்ஸோனு

கேடில் கலந்த சோப் இது ஒன்றே



R.P. 77-50 TM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, Sept., 2, 1951 | No. 9

**சந்தா விபரம்**

ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

# தமிழ்ச் சிவஞானபோதம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவிளையாடல் செய்யுள் வருமாறு :-

திருந்திய சிவாகம நூலுஞ்
 செவ்வியிற் றுளங்க வானுள்
விரிந்தநா ரணைக் கணத்துள்
 விளங்குதண் மதிய மென்னப்
பரிந்தமா ணவர்கள் சூழப்
 பத்தனுர் வரவு பார்த்துப்
பெருந்துறைக் குருந்த நீழ
 லிருந்தனன் பெரிய வாசான்.

திருவாதவூரடிகள் புராணச் செய்யுள் பினவருமாறு:

உருத்திராக்ற் திருமணியை யிலங்கு காதி லொண்சிரத்திற் கந்தரத்தி லொளிகொண் மார்பிற், கரத்திலணிந் திலகுதிரு முண்ட மங்கிக் கண்காந்த நன்னுதன்மேற் கவினச் சாத்தித், திருத்திகழும் வேதியனு ரம்பொன் மேனி திகழ்வதனண் டகமகிழ்வார் செங்கை மீது, பொருத்தமுறும் புத்தகமே தையா வென்னப் பொய்ம்மையிலாச் சிவஞான போதமென்றுர்.

சிந்துவெளி நாகரீகத்தைப் பற்றி, மொஹஞ்சதரோ, ஹரப்பா முதலிய இடங்களில் செய்யப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்களால் இப்போ 5000-க்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குமுன் திராவிட சாதியார் பாரதநாடு முற்றிலும் பரவியிருந்தார்கள் என்றும் அவர்களுடைய எழுத்தும் பாஷையும் (proto-dravidian) தமிழின் தாய்ப்பாஷை என்றும் அவர்களுடைய கடவுள் சிவன் என்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்டுளது.

ஆனல் எங்களால் பெரிதும் நன்கு மதிக்கப்படும் பாஞ்சோதி முனிவரும் சிவஞான முனிவரும் தாம் இயற்றிய திருவிளையாடல் புராணத்தும் இறைவன் முதல் வடமொழியைப் பாணினிக்கும், பின் தமிழ்மொழியை அகத்தியனுருக்கும் அருளிச்செய்தாரென்று பாடியுள்ளார். பாணினி முனிவர் கிறிஸ்துவுக்கு முன் நான்காம் நூற்றுண்டியிலுள்ள

**வே. விசுவலிங்கம்**

வர். தமிழ் பாணினிக்குப் பல்லாயிரம் ஆண்டு முன்னுள்ள பாஷை.

இதிலிருந்து நாம் மனதிற் பதிக்கவேண்டிய உண்மையாதெனில், கடவுள்மாமுனிவர் சொன்னுர், பரஞ்சோதி சொன்னுர், சிவஞானமுனிவர் சொன்னுர். ஆகையால அவர் கூற்று உண்மையேயென்று கொள்ளலாகாது. தீரச் சரித்திர ஆராய்ச்சியாலும், இலக்கண இலக்கிய தருக்க ஆராய்ச்சியாலும் உண்மையென நிலைநாட்டப்பட்டமையே முடிந்த உண்மை எனக் கொள்வது முறையாகுமே அன்றி, புராணம் பாடுவோர் வரைந்தன யாவும் மறுக்கொணு உண்மையென்று ஏமாந்து போகப்படாதென்பது.

பரஞ்சோதி முனிவர் மூன் றவயசுப் பாலனுக்கு ஞானேபதேசம் செய்தபோது மெய்கண்டப் பெருந்தகை வடமொழியையாவது தமிழையாவது கற்றுணர்ந்தவரல்ல. அப்பாரயப் பால்நல்வாயொரு பசுங்குழவியை வடமொழி ஆகமத்தைத் தமிழில் மொழிபெயர் என்று விளர்ந்தார் என்னும் கூற்று அசம்பாவிதமென்க.

# வ. ரா. உணர்வு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவு', 'சின்னச் சாம்பு', 'விஜயம்', 'கற்றது குற்றமா?' 'தமிழ்ப் பெரியார்கள்' என்ற பிரசித்தம் வாய்ந்த நூல்களில் வெட்டொன்றும் துண்டிரண்டுமாக எத்தனையோ புரட்சிகரமான கருத்துக்களை மழைப்பாது வெளியிட்டிருக்கின்றுர்.

மகா கவி பாரதியார் என்ற அருமையான நூலையும் இப்பெரியார் தமிழருக்கு வழங்கிச் சென்றுள்ளார். சிந்தனைச் செம்மல் வ. ரா. பாரதியாரை நேரிற் கண்டு அவருடன் பழகிய பாக்கியம் பெற்றவர் இந்நூல் பாரதியை அறிவதற்கு ஒரு வழிகாட்டியாகும்.

பாரதியார் காட்டிய வழியைப் பின்பற்றிப் பெண் விடுதலைக்காக வ. ரா. முன்னணியில் நின்று போராடினுர். கோதைத் தீவு முதற்பதிப்பு 1945-ல் வெளியாயிற்று. அந்நூலின் முகவுரையில் வ. ரா. அவர்கள் எழுதியிருப்பதில் ஒரு சிறுபகுதிவருமாறு: "ஆணேடு பெண் 'சரிநிகர் சமானமாக' வாழ்ந்திருந்தால் இந்த நாட்டின் ஆட்சி நம்மவர்களின் கையை விட்டுப் போயிருக்காது. கல்வி மேம்பாடடைந்து மக்களுக்குள் அறிவு பரவிக் கிடக்கும். கவிதை ஊற்றுப் பெருக்கெடுத்து நம்மவர்களை உய்வித்திருக்கும். நம்மவர்கள் விதி என்று மண்டையில் அடித்துக்கொள்ள மாட்டார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்று மார்பு விரியப் பேசுவார்கள். அடிமைக்கு வாழ்வு ஏது? இன்பம ஏது? கடவுள் ஏது? எல்லாம் பாவனைகள் தான்."

வ. ரா. ஓர் இலக்கிய மேதை மட்டுமன்று. அதிர்வேட்டுச் சிரிப்புடன் சுவையாகச் சம்பாஷிப்பதில் ஈடு இணையற்றவர். பாரதியைத் தமிழரின் தெய்வம் எனப் போற்றச்செய்த வ. ரா. பாரதி யுகத்தின் ஒளியெனத் தமிழ் நாட்டில் விளங்கினுர். அந்த ஒளி இன்று மறைந்துவிடத்தும் அது தமிழ் எழுத்தாளர்களின் உள்ளொளியாக என்றும் பிரகாசிக்கும்.

கடந்த பல வருடங்களாக ஈழகேசரி இதழ்கள் வ. ரா. அவர்களைப் பிரதி வாரமும் சென்றடைந்து வருகின்றன. ஈழகேசரியில் வெளியாகும் புத்தக விமர்சனங்களையும் இலக்கியக் கட்டுரைகளையும் அவர் தவருது படிப்பதுண்டு. இதனை அவரே எனக்குத் தெரிவித்தார். இலங்கையிற் பத்திரிகைத் தொழில்பார்த்தகாலத்திலே தமது வாழ்க்கைத்துணையைத் தேடிக்கொண்ட ஆசிரியர் வ. ரா. அவர்களுக்கு, இலங்கைபற்றிய சிந்தனைஎன்றுமே இருந்திருக்கும்.

தமிழ் உரைநடைக்கு ஒரு புது மெருகு தந்த வ. ரா. தமிழ்நாட்டின் தலைசிறந்த சீர்திருத்தவாதியாவார். அவர் உயிருடன் இருக்கும்போதே தமிழ்மக்கள் அவரைக் கௌரவித்து மணிமலரும் பொற்கிழியும் வழங்கினர்.

பாரதியின் இலட்சியங்களை உலகிடைப் பரப்புவதற்கு ஒரு வ. ரா. தோன்றினுர். இன்று அந்த வ. ரா. உயிருடன் இல்லை. ஆனல் அவர் உணர்வு தமிழகத்திற் கோயில் கொண்டிருக்கின்றது.

—இராஜ அரியரத்தினம்

# புனிதவதி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ராத்திரியிலே உன் வீடு தேடி ஓடி வந்தேனே! இரங்க மாட்டாயா?

**புனித :** (பயத்துடன்) தங்களுக்குப் பைத்தியம் பிடிக்க வில்லையே!

**அரு:** ஆம், நான் பைத்தியகாரன் தான் என்னைப் பைத்தியகாரனுக்கிய குற்றம் உன்னையே சாரும். உன் அழகைத் தான் சேரும். அதைப் போக்கும் மருந்தும் உன்னிடம்தான் உண்டு.

வீசும் தென்றல் என்னை மோசம் செய்கிறது. வெண்ணிலவின் வெண்மையைச் சகிக்கக்கூடவில்லை. வேனிலான் வெங்கணை நல் வேதனையைத் தந்திட யான் பானம் மறந்தேன்; பணி மறந்தேன். உன் பாதமே தஞ்சமென் றடைந்தேன். புனிதா! என்னைக் கைவிட்டுவிடாதே.

**புனித :** (கோபமும் பயமும் கொண்டு) சீ! நீரும் ஓர் அரசகுமாரர். வெட்கமாயில்லை; மகளிரின் மானங் காக்க மாநிலத்தையே இழக்கவும் தயங்காத மன்னர் குலத்திற்றுனே நீரும் பிறந்தீர்? அதிதியாய் வந்து பதிதனுய்ப் பரஸ்திரியின் முன் காதற் பிச்சை கேட்கும் நீர் ஓர் அரசிளம் செம்மல்! உமக்கேன் இந்த விருது. குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு 'என்ற விருதுதான் உமக்குத் தகும்.

**அரு:** உன் எழில் வாய் திறந்து எது சொன்னுலும் அது இனிக்கவே செய்கிறது. புனிதா! என்னைச் சோதிக்காதே. அதை என்னுல் தாங்க முடியாது. பாராளும் வேந்தன நான் உன் பாதங்களில் பணிகிறேன்; வேண்டுகிறேன். உன் கண்ணசைப்புக்கு ஒரு நாடு; உன் புன்சிரிப்புக்கு ஒரு தேசம்; உன் கொவ்வைக் கனி வாய்க் குயில் மொழிக்கு ஓர் குவலயமென்று வைத்துப் பகடை ஆடவும் முடியும் என்னுல். என்னை மறுக்காதே.

**புனித :** சீ! ஒரு பெண்ணின் மனத்தை இன்மொழிகள் மயக்கிவிடுமென்று நினைக்கிறீர்? ஒரு கற்பரசியின் உள்ளத்தை உம் கனிமொழிகளாற் திருப்பிவிடலா மென்று கருதுகிறீர்?

வேண்டாம். இளவரசே! வேண்டாம்! நீரும் சகோதரிகளுடன் பிறந்தவர்தாமே. உமக்கு இரக்கமில்லையா? நாட்டு மக்களின் அற வாழ்க்கையை வளர்க்கும் கடப்பாடுடையீர் நீர். அதை மறந்து அந்நிய ஸ்திரீயின் கற்பைக் கவரக் கங்கணங்கட்டி நிற்பதா? உமது காலடியில் விழுந்து கெஞ்சுகிறேன். (காலடியில் விழுதல்) மன்றுடுகிறேன்; மண்டியிட்டு அழுகிறேன். வேண்டாம், வேண்டாம் இந்த அக்கிரமம்.

**அரு:** மாய்மாலக் கண்ணீரால் என்னை மயக்கிவிட முடியாது. நேரம் அவமே கழிகிறது. என் மனதை மாற்றலாம் என்று மனப்பால் குடியாதே. 'உன்னையும், உன் வீட்டு அடிமை ஒருவனையும் கொலைசெய்து இம்மஞ்சத்திலிட்டு, நீங்களிருவரும் முறைகேடாக நடந்தமையால் என கடமையைச் செய்தேன்; உங்களைக் கொன்றேன்" என்று பறைசாற்றுவேன்; பழிவாங்குவேன்; கொக்கரிப்பேன். நீ இறந்தும் தப்பமுடியாது. அவப்பெயர் உன் குல முழுதும் தொடரும். உன் கணவன் வாழ்நாள் முழுதும் தொங்கிய தலையுடனும், தூக்கமுடியாத மனப்பாரத்துடனும் திரியவும் உன் தந்தை மானம் பொறுது வாழ்வையே இழக்கவும் செய்வேன். சம்மதமா? குருதியாலும் கழுவ முடியாத கறை; பிராயச்சித்தத்தாலும் போக்கமுடியாத அவப்பெயர்; இவற்றை உன் குலத்திற்கு ஏற்படுத்தச் சம்மதமா சொல்.

அல்லது, என் இஷ்டத்திற்கிணங்கி இன்பந்தர இயலுமா? இது அந்தரங்கத்தில், என்றும் காப்பாற்றப்படும் என்று உறுதி கூறுகிறேன். என்ன சொல்கிறுய்?

**புனித :** (தொங்கிய தலையுடன் நிற்கிறுள்.)

**அரு:** புனிதா! நீ புத்திசாலி.

திரை

—(தொடரும்)

# பிரஸ்செல்ஸ் நகர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்சிகள் கூடுகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக இருந்தன. சுயேச்சையாகப் பறந்து வெளியே செல்ல அவைகள் பகீரதப் பிரயத்தனம் செய்தன. என்றுலும் கூட்டின் கம்பிகள் வலிமையுடையனவாக இருந்தன. பட்சிகளை வாங்குபவர்கள் அவைகளுக்கு உணவாக அங்கே தொகையாகக் கொண்டுவரப்பட்ட புழுக்களைச் சண்டுக்கணக்காக வாங்குகின்றுர்கள். இது என்ன பரிதாபக் காட்சி! தனக்கு விடுதலையையும் இன்பத்தையும் விரும்பும் மனிதன் பிற உயிர்களுக்கும் அதே இன்பத்தைக் கொடுக்க விரும்பானுயின் அவனுக்கும் விலங்கிற்கும் என்ன வித்தியாசம்?

"எவ்வுயிரும் என்னுயிர்போல்
 எண்ணி இரக்கவுகின்
தெய்வ அருட்கருணை
 செய்யாய் பராபரமே"

என்று கூறிய தாயுமானப் பெருந்தகையின் கனிந்த இதயம் மக்களிடையே எங்கும் உண்டாகவேண்டும். அப்போதுதான் அநீதி ஒழிந்து நீதி நிலவும். அணுக் குண்டின் பயமும் நம்மை விட்டு அகலும்.

—தொடரும்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

# வானிசை

4-ம் பக்கத்தொடர்ச்சி

கலை என்றுக அப்பியாசம் செய்யாமற் குழப்பினுர்கள். வினாசினெட்டும் இக்கோஷ்டியில் சேர்ந்திருந்தது.

திரு. கே. மாதவன்

இவர் 'தாயே' என்ற பாடலைப் பதட்டத்துடன் பாடினுர். சொற்களை இன்னும் தெளிவாகப் பாடவேண்டும். தோடி பாடிய பொழுது சுருதி இடைக்கிடையே விலகியது. இயலாத சங்கதிகளைப் பிடிக்கக்கூடாது. தாரஸ்தாயி சுரங்கள் ஒன்றும் தெளிவாயிருக்கவில்லை. 'தேனும் பாலும்' என்ற உருப்படி நன்றுயிருந்தது. கற்பனு சுரங்கள் இன்னும் நன்றுகப் பாட முயற்சி செய்யவேண்டும்.

## முதலாளி வர்க்கத்தின் கொடுமை

### கமக்காரர்கள் சங்கம் நிறுவினர்

வருத்தலைவிளான், கட்டுவன், மயிலிட்டிப் பகுதியிலுள்ள கமக்காரர்களின் கமக்காரர் அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டமொன்று சமீபத்தில் வருத்தலைவிளான் அ. மி. பாடசாலை மண்டபத்தில் கிராமச்சங்க அங்கத்தவர், ஆசிரியர் திரு. ஆர். ரீ. சிவரத்தினம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில், கமத்தொழிலின் சிறப்பு, நம் நாட்டின் உணவுநிலை, காணிகளைக் குத்தகைக்குக் கொடுக்கும் முதலாளி வர்க்கத்தினர் செய்யும் கொடுமைகள் ஆகியவற்றை எடுத்துரைத்தார். பின்னர் திருவாளர்கள் சி. கார்த்திகேசு, கட்டுவன் கிராம விதானையார் க. நாகலிங்கம், வ. முத்தையா, ஆசிரியர் எஸ். சின்னத்தம்பி, க. சிவப்பிரகாசம் ஆகியோர் மேற்படி சங்கத்தின் அத்தியாவசியம், இன்றைய கமக்காரர்களின்நிலை என்பனவற்றைப் பற்றிப் பேசினர். பின்னர் கீழ்க்காணும் பிரேரணை நிறைவேறியது;

"தோட்டப் பயிர்ச் செய்கைக் காணிகளுக்கு, தற்போது கொடுத்துவரும் குத்தகைப்பண வீதமே இன்னும் தொடர்ந்து இருக்க வேண்டுமென இச்சபை அபிப்பிராயப்படுகிறது".

பின்னர் சங்க உத்தியோகஸ்தர்களாகக் கீழ்க்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள்: ஆர். ரீ. சிவரத்தினம், பூ. பத்திநாதர் (மயிலிட்டி தெற்கு கிராம விதானை); தலைவர்: சி. கார்த்திகேசு; உபதலைவர்: க. நாகலிங்கம் (கட்டுவன் கிராம விதானை); காரியதரிசி: க. சிவப்பிரகாசம்; உபகாரியதரிசி: ஆ. சிவகுரு; தனதிகாரி: சி. சுப்பையா; நிர்வாகசபை அங்கத்தவர்கள்: இ. வேலுப்பிள்ளை, கொ. கந்தன், வெ. வல்லி, வ. வேலுப்பிள்ளை, சி. சின்னக்குட்டி, சு. சுப்பிரமணியம்.

பின்னர் காரியதரிசி அவர்களினல் கூறப்பட்ட நன்றியுரையுடன் கூட்டம் 9 மணியளவில் நிறைவெய்தியது. (ஹரிஜனர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளும் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம—குரும்பசிட்டி, முத்தையா—சபாரத்தினம் அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு செப்டம்பர் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org